மாலை 48 மணி 6 ஜுன் 2006 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு





# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை

## வைகாசிப் பெருவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

தமிழ்த் திருநாட்டின் நெடுகிய வரலாற்றில் வீரமும், விவேகமும் வெற்றி நடம்பயின்ற மூதூர், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தகவுடைய பேரூர், அருந்திறல் வேந்தர் பல்லோர் அரசாண்டு அரசியல் தெளிந்த அருங்கூடம் இவ்வண்ணமாகப் பல திறத்தாலும் பெரும்புகழ் பெற்றுக் கூடல் என்றும் ஆலவாய் என்றும் சிறப்புடன் பேசப்படும் மதுரை மாநகரில் வேந்தன் முன்னெழுந்த மெய்ப் பொருள் வாதத்தில் நாராயணனே பரம்பொருள் என்று வாதிட்டு நிலை நாட்டிப் பொற்கிழி பெற்ற பெரியாழ்வார் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணனுக்குப் பல்லாண்டு பாடிய மதுரையம்பதியில் ஊழி முதல்வன் உலகளந்த பெருமாள் ஆழி துயில் கொண்ட அலகிலா விளையாட்டுடையான் திருக்கொண்டு பொன்மேனி கொண்டு, அருக்கன் அணி நிறங்கொண்டு செருக்கிளரும் பொன்னாழியும் புரிசங்கமும் கைகொண்டு இத்திருக்கோயிலில் அருள்மிகு கூடலழகர் என்னும் திருப்பெயர் தாங்கி எழுந்தருளியுள்ளார். அப்பெருமானுக்கு நிகழும் ஸ்ரீ விய வருடம் வைகாசி திங்கள் 18ம் நாளில் (01-06-2006) தொடங்கி ஆனி திங்கள் 1ம் நாளன்று (15-06-2006) நிறைவு பெறுமாறு வைகாசி பெருந்திருவிழா இனிது நடைபெறும்.

திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற இத்திருத்தலத்தில் அல்லவை கடிந்து அறம் நிலைத்திட அருள் பாலித்து நிற்கும் கூடல் அழகரை வழிபட்டு எல்லா நலமும் பெற்று வாழ்க என வேண்டுகிறோம்.

### முக்கிய திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| கெருடசேவை | : | 05-06-2006 திங்கட்கிழமை |
| திருத்தேர் | : | 10-06-2006 சனிக்கிழமை |
| தசாவதாரம் | : | 12-06-2006 திங்கட்கிழமை ராமராயர் மண்டபம் |

### திருக்கோயில் சேவை கட்டண விபரங்கள்

| எண் | பொருள் | கட்டண ரூ. பை |
|---|---|---|
| 1. | அஷ்டோத்திரம் | 3.00 |
| 2. | சுகஸ்நாமம் | 15.00 |
| 3. | மாலை | 2.00 |
| 4. | விமான சேவை | 5.00 |
| 5. | அர்த்தமண்டப நுழைவு கட்டணம் | 2.00 |
| 6. | அர்த்தமண்டப நுழைவு சிறப்பு நாட்கள் (சனிக்கிழமை) | 3.00 |
| 7. | சிறப்பு நாட்களில் சிறப்பு தரிசனம் (சனிக்கிழமை) | 5.00 |
| 8. | புரட்டாசி சனி, வைகுண்ட ஏகாதசி சிறப்பு தரிசனம் | 10.00 |
| 9. | வைகுண்ட ஏகாதசி பரமபதவாசல் தரிசனம் சிறப்பு நுழைவு | 25.00 |
| 10. | புகைப்படம் எடுத்தல் அனுமதி | 20.00 |
| 11. | வீடியோ அனுமதி | 200.00 |
| 12. | அலங்கார திருமஞ்சனம் | 150.00 |
| 13. | வடை மாலை | 30.00 |
| 14. | புதுகணக்கு / அழைப்பிதழ் காணிக்கை | 20.00 |
| 15. | தளிகை கட்டணம் கிலோ 1க்கு | 10.00 |
| 16. | திருமணம் பதிவு | 250.00 |
| 17. | திருமணக்குழு நுழைவு கட்டணம் | 50.00 |
| 18. | அன்னதானம் நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு உணவளித்திட | 1200 |
| 19. | அன்னதானக் கட்டளை நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு உணவளித்திட | 15000 |

### திருப்பணி நன்கொடை வேண்டுகோள்

இத்திருக்கோயிலில் திருப்பணி நடைபெற்று வருகிறது திருப்பணிக்கு நன்கொடை வழங்க விரும்பும் பக்தர்கள் "செயலாளர் & பொருளாளர் திருப்பணிக்குழு, அருள்மிகு கூடலழகர்திருக்கோயில், மதுரை - 1." என்ற பெயருக்கு ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ செலுத்தி அருள்மிகு கூடலழகர் பெருமாள் திருவருள் பெற அன்புடன் வேண்டுகிறோம். திருப்பணி நன்கொடைக்கு 80G-ன் கீழ் வருமான வரிவிலக்கு அளிக்கப்படும்.

இவண்

**செயல் அலுவலர் / அறங்காவலர்கள்**

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2037 விய- ஆனி
மாலை 48 மணி 6 ஜூன் 2006

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

"எத் தன்மையர் ஆயினும் 'ஈசனுக்கு அன்பர்' என்றால்
'அத் தன்மையர் தாம் நமை ஆள்பவர்' என்று கொள்வார்;
'சித்தம் தெளியச் சிவன் அஞ்சு எழுத்து ஓதும் வாய்மை
நித்தம் நியமம்' எனப் போற்றும் நெறியில் நின்றார்.

சோமாசிமாற நாயனார் புராணம்
- 3வது பாட்டு.

முத்தமிழறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 5வது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் தமிழ் நாட்டிலுள்ள இந்து சமயத் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவ கொள்கைக்கு செயல் வடிவம் கொடுத்திட முடிவு செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த அரசு ஆணையைப் பிறப்பித்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அருஞ்செயல் அனைவராலும் பாராட்டி வரவேற்கப் பெற்றுள்ளது.

அதே போல் 'இனி முக்கிய பிரமுகர்களுக்கு (V.I.P) ஆலயங்களில் பட்டுப் பரிவட்டம் கட்டுகின்ற மரியாதை கூடாது' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து. உரிய அரசு ஆணை வெளியிடப் பெற்றுள்ளது. இதனை அனைத்து திருக்கோயில் நிர்வாகிகளும் தவறாது பின்பற்றப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வழக்கம்போல் திருக்கோயில் இதழில் அறிஞர் பெருமக்கள் அருமையான கட்டுரைகள் வழங்கியுள்ளனர்.

சொல்லின் செல்வர் திரு. சுகி. சிவம் 'வரலாமா, வேண்டாமா' எனும் தலைப்பில் தமக்கே உரிய கதைப் பாணியில் சிந்தனையைத் தூண்டும் கட்டுரையை வழங்கியுள்ளார். நெக்குருகி நினைப்பவர் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு இறைவன் குடியேறுகிறார் என்பதை அற்புதமாய் வடித்துள்ளார்கள்.

'மனக்கோயில் கொண்ட மகாதேவன்' என்னும் தலைப்பில் பூசலார் நாயனார் வரலாறும், 'வைணவம் வாழ்விக்க வந்த பிள்ளை லோகாச்சாரியர்' வரலாறும் படித்து இன்புறத்தக்கன.

தமிழ் நாட்டுச் சித்தர் பரம்பரையின் முதல்வராக வைத்துப் போற்றப்படும் அகத்திய மாமுனிவர் குறித்து பேராசிரியர் முனைவர் இரா.செல்வக்கணபதி அவர்கள் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வழங்கியுள்ளார்கள்.

சைவ, வைணவத் திருத்தலங்களைக் குறித்த 'திருத்தல உலா' எனும் பகுதி, இவ்விதழில் தொடங்கப் பெற்றுள்ளது, சென்னை மாடம்பாக்கத்திலுள்ள அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் தலவரலாறு குறித்து 'மாடம்பாக்கத்து மகேசன்' எனும் தலைப்பிலும் திருக்கண்ணபுரம், அருள்மிகு சௌரிராஜப் பெருமாள் திருக்கோயில் தல வரலாறு குறித்து "கண்ணபுரத்து கண்ணமுதே" எனும் தலைப்பிலும் சிறப்பாக கட்டுரைகளாக வெளிவந்துள்ளது.

அனைவரும் திருக்கோயில் இதழைப் படித்து மகிழ்ந்திட அன்புடன் வேண்டுகிறேன்.

அன்புள்ள

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்



# அர்ச்சகர் நியமனத்தில் சாதிப்பாகுபாடு நீக்கம்

## அரசு ஆணை

உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும், இந்து சமயத் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கைக்கு செயல்வடிவம் கொடுத்திட அரசு முடிவு செய்து,

**''இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்று''**

**மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒப்புதலுடன் அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.**

அரசாணை (நிலை) எண் 118.
தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை (அ.நி. 4-2)
நாள் 23.05.2006



## காலப் பெட்டகம்

மக்களாட்சித் தத்துவமெனும் ஜனநாயகக் கோட்பாட்டினை பழம்பெரும் சோழ மன்னர்கள் காலத்திலேயே குடவோலை முறையின் வாயிலாக தமிழ் மக்கள் கடைப்பிடித்தார்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றாக ''உத்திரமேரூர்'' கல்வெட்டுக்கள் இப்போதும் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

**-மேதகு ஆளுநர் அவர்கள்
24.05.06 அன்று சட்டபேரவையில்
ஆற்றிய உரை.**

# பூரணகும்பம் மற்றும் பரிவட்ட மரியாதை இரத்து செய்தல் அரசு ஆணை

தமிழ்நாடு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களுக்கு வருகை தரும் மதத் தலைவர்களுக்கு மட்டும், சம்பந்தப்பட்ட திருக்கோயிலின் பழக்க வழக்கத்திற்குட்பட்டு பூரண கும்ப மரியாதை தேவைப்படின் ஏற்பாடு செய்து வரவேற்கலாம் என்றும், இதர முக்கிய பிரமுகர்களுக்கு பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு கொடுப்பதைத் தவிர்க்கவும், பரிவட்டம் மரியாதை செய்வதை திருக்கோயில் பழக்க வழக்கத்திற்குட்பட்டு தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.119,
தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை
நாள் 31.5.2006.

## இதழின் உள்ளே ....


| | | |
|---|---|---|
| 1. | வரலாமா ? வேண்டாமா ? - சொல்லின் செல்வர் சுகி. சிவம் | 5 |
| 2. | வைணவம் வாழ்விக்க வந்த பிள்ளைலோகாச்சாரியர் - திருமதி கோகிலம்மா | 7 |
| 3. | மனக்கோயில் கொண்ட மகாதேவன் - கே. பாலசுந்தரி | 10 |
| 4. | தலமர வழிபாடும் தாவர இனப் பாதுகாப்பும் - மா. குணசேகரன் | 12 |
| 5. | நாரணப் பிள்ளையார் - இரா. தமிழ்வேந்தன் எழில் | 15 |
| 6. | தொண்டு - முனைவர் அரங்க. இராமலிங்கம் | 16 |
| 7. | திருமந்திர உபதேசம் - டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப(ஓய்வு) | 18 |
| 8. | தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - செந்தமிழ் வாரிதி முனைவர் இரா. செல்வக்கணபதி | 20 |
| 9. | திருவிளையாடல் புராணம் - இரா. அரங்கசாமி | 22 |
| 10. | மூதுரை காட்டும் முதுநெறிகள் - டாக்டர் பு.ஏ.இராமையா. இ.ஆ.ப | 25 |
| 11. | திருத்தல உலா | 27 |
| 12. | வேண்டாமை என்னும் மனப்பான்மை வேண்டும் - டி.சந்திரசேகரன்., இ.ஆ.ப., | 30 |
| 13. | குரு பக்தி - தென்னம்பட்டு ப.ஏகாம்பரம் | 32 |
| 14. | மாடம்பாக்கத்து மகேசன் - ஜெய உத்திரன் | 34 |
| 15. | கண்ணபுரத்து கண்ணமுதே - கே. கோவிந்தராஜன் | 37 |



# அன்னை அகிலாண்டேஸ்வரி

**திருவானைக்கோயில்**

# வரலாமா? வேண்டாமா ?

சொல்லின் செல்வர்
சுகி. சிவம்

சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குப் போயிருந்தேன். ஒரு காலை ஊன்றி ஒரு காலை உயர்த்தி நின்ற நடராஜர் அழகில் நெடுநேரம் லயித்து விட்டேன். நடராஜர் ஒரு காலை உயர்த்தி இருப்பதற்கு ஏதோ ஒரு நல்ல காரணம் இருக்கும் என்று சட்டென்று மனத்திற்குப் பட்டது. என்னுடன் வந்த ஒரு கல்லூரி மாணவரிடம், ''நடராஜர் ஒரு காலை ஊன்றி ஒரு காலை மட்டும் உயர்த்தி இருப்பதற்கு என்ன காரணம் சொல்ல முடியுமா?'' என்றேன். அந்த மாணவர் சட்டென்று ''சார் ! ஊன்றியிருக்கும் அந்தக் காலையும் ஊன்றாமல் உயர்த்தினால் விழுந்துடுவார் சார்'' என்று விபரீதமாக விளக்கினார். சிரிக்க வைத்தார். சிரித்து விட்டேன்.

எனக்கென்னவோ நடராஜர் ஒரு காலை உயர்த்தி இருப்பதே நமது நெஞ்சில் அந்தக் காலை வைத்து நமக்குள்ளே அவர் வர விரும்புவது போல தோன்றியது. தூக்கிய காலை நம் நெஞ்சில் வைக்க நாம் அனுமதித்தால் மறுகாலையும் தூக்கி மனசுக்குள் வைத்து நம்மோடு வர அவர் ஆசைப்படுவதாகவே தோன்றுகிறது.

''இங்குநம் இல்லங்கள் தோறும்
எழுந்தருளி
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும்
சேவகனை''

என்கிற திருவாசக வரிகளுக்கான செயல்முறைதான் (demonstration) நடராஜாவின் தூக்கிய திருவடி என்றே நினைக்கிறேன்.

ஆனால் கோவிலுக்குப் போகிற யாரும் கடவுளைக் கையோடு வீட்டுக்குக் கூட்டி வர தயாராக இல்லை. அம்பலத்து இறைவரை அம்போ என்று அங்கேயே விட்டுவிட்டு வரவே விரும்புகிறார்கள். தனக்கு வேண்டும் போதெல்லாம் வந்து பார்த்து விட்டு தேங்காய் பழம் கொடுத்து வாங்காத வரமெல்லாம் வாங்க விரும்புகிறார்களே ஒழிய கையோடு கடவுளைக் கூட்டி வர ஒரு பயலுக்கும் விருப்பம் இல்லை!

பெற்றவர்களையே முதியோர் இல்லத்தில் விட்டு விட்டு அவசிய ஆத்திரத்துக்குப் போய்ப் பார்த்து வர விரும்பும் நமது ஜனசமூகம், ''கடவுளாவது கையோடு கூட்டி வருவதாவது? பிறகு அந்த ஆளோடு யார் கஷ்டப்படுவது'' என்கிறார்கள். ஒரு கதை சொல்கிறேன். அதன் பிறகாவது இந்த ஆசையாருக்காவது வருகிறதா பார்ப்போம்!

ஒரு மகாராஜா காட்டிலே வேட்டைக்குப் போனார். கூட வந்த படை குடிகளை விட்டுப் பாதை மாறிக் காட்டுக்குள் போய்விட்டார். வசமாகத் திருடர்கள் மத்தியில் அகப்பட்டுக் கொண்டார். ஆபத்தில் அலறினார் அரசர். நல்ல வேளையாக காட்டில் வாழும் எளிய ஏழைகள் ஆறுபேர் எதேச்சையாக அந்த வழியில் வந்து கொண்டிருந்தனர். அரசர் என்று அறியாமலேயே ராஜாவைக் காப்பாற்றித் திருடர்களை அடித்து விரட்டினர். அதற்குள் ராஜாவின் படை அங்கே தேடி வந்து விட்டது.



அரசர் ஆறு பேரையும் அரண்மனைக்கு அழைத்து வந்து விருந்து கொடுத்து ஒரு வாரம் தங்க வைத்துப் பரிசுகள் கொடுத்து அனுப்ப நினைத்தார். விருந்து முடிந்து புறப்படும் போது அவரவர் கேட்கும் பரிசுகள் தருவதாக வாக்களித்தார்.

முதல் நபர் பசியோடும் பட்டினியோடும் போராடி வருவதாகவும் கொஞ்சம் நிலம் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்றான்.

இரண்டாவது நபர் தொழில் செய்ய பணம் தேவை, அதற்கு முதலாக அரசர் தன்னை நம்பிச் சிறிது பணம் தரும்படி வேண்டினான்.

மூன்றாவது நபரோ தனக்கு ஏதும் கேட்காமல் தனது ஊர்க் கோவிலுக்கு அரசர் நன்கொடை தரும்படி கேட்டான். நான்காவது மனிதனோ ஊருக்குப் பாதையும் குடிநீரும் ஏற்பாடு செய்ய வேண்டினான்.

ஐந்தாவது நபர் தனது திருமணத்திற்கு அரசர் நேரில் வந்து பரிசளித்துக் கவுரவிக்க வேண்டும் என்றான். இப்போது ஆறாவது நபர் கேட்க

வேண்டும்.

கொஞ்சம் தயங்கியவன் பிறகு தைரியத்துடன் அரசரைப் பார்த்து, ''ஆண்டுதோறும் உங்களை நாங்கள் காப்பாற்றிய இந்த நல்ல நாளில் எளியவனாகிய இந்த ஏழையின் வீட்டுக்கு மகா அரசர் எழுந்தருளி, நான் தரும் எளிய உணவை ஏற்று என் உடன் தங்கி என்னை அரசர் பெருமைப் படுத்த வேண்டும்'' என்று அன்பொழுக வேண்டினான். தன்னிடமிருந்து எதையும் பெற விரும்பாது தான் எதாவது தர வேண்டும் என்று நினைக்கிற ஏழையின் அன்பு அரசரை நெகிழ வைத்தது. அவனைக் கட்டித் தழுவிக் கண்ணீருடன், ஆண்டுதோறும் அவன் இல்லம் வருவதாக அரசர் உறுதியளித்தார். மற்ற யாவருக்கும் அவரவர் கேட்ட பரிசுகள் தரப்பட்டன.

அடுத்த ஆண்டு அரசர் அவன் இல்லம் வரவேண்டிய காலம். ஏழையின் வீட்டுக்கு வருகிற பாதை சரியில்லை என்று சேனாபதி பாதையைச் செப்பனிட உத்தரவிட்டார். அரசர் தங்க வேண்டுமே என்று கவலைப்பட்ட முதலமைச்சர் ஏழையின் வீட்டையே அரண்மனை மாதிரி மாற்றி அமைத்தார். அவருக்கு ஏற்ற உணவாக இருக்க வேண்டுமே என்று மகாராணி முன்கூட்டியே சமையல் கலைஞர்களை அனுப்பி வைத்தார். எத்தனை பேர் வந்தாலும் சாப்பிட வேண்டுமே என்று ஏகப்பட்ட அரிசியும் பண்டங்களும் வந்து இறங்கின.

இப்படி அரசர் வந்து போகும் தினம் வரவர வெகு சிறப்பாகி ஒரு திருவிழாவாகவே ஆனது. ஊரார் நன்மை பெற்றனர். ஒரு முறை அரசரோடு தானும் வருவேன் என்று பிடிவாதம் செய்து உடன்வந்த இளவரசி, அந்த இளைஞன் பண்பை மெச்சினாள். அழகு, அறிவு கண்டு நெஞ்சைப் பறி கொடுத்தாள். அரசனும் நெகிழ்ந்து மகள் விரும்பியபடி மணமும் செய்து கொடுத்தான். அரசனுக்கோ மகன் இல்லை. எனவே முதுமைக் காலத்தில் மருமகனை அழைத்து நாட்டையே கொடுத்து ஆளச் செய்தான். எப்படிக் கதை பார்த்தீர்களா?

கோவிலுக்குப் போய் அதையும் இதையும் கேட்டு வாங்கி வருகிறவர்கள் நான் முன்னால் சொன்ன ஐந்து நபர்கள். அரசனிடம் சின்ன சின்ன பரிசு பெற்றார்கள். ஆனால் அரசனைத் தன் வீட்டுக்கு அழைத்தவன் எவ்வளவோ மேன்மை பெற்றான். அரசும் பெற்றான். அந்த ஆறாவது நபர்தான் ஞானிகள். ஞானிகள் கடவுளைத் தன் நெஞ்சவீட்டுக்கு அழைக்கிறார்கள். நினைப்பவர் மனமே கோயிலாய்க் கொண்டு கடவுள் குடியேறுகிறார். அவ்வளவுதான். அங்கு சகல ஐஸ்வர்யங்களும் குடி புகுந்து விடுகின்றன. இறுதியில் மோட்சசாம்ராஜ்யம் பெற்று அவர்கள் முக்தி பெறும் போது அவர்கள் வாழ்ந்த இடமே கோவிலாகி விடுகிறது!

சரி... இனி சிதம்பரம் போனால் நடராஜர் காலைத் தூக்கி ''உன் நெஞ்சில் வைத்து வரவா'' என்றால் என்ன சொல்லப் போகிறீர்கள்? ''வா'' என்பீர்களா? ''வேண்டாம்'' என்பீர்களா?

# இடர் களைவாய் இறைவா

**சிவ. அம்பலவாணன்**

வினையின் பயனாய் ஆன்மாக்களுக்கு ஏற்படும் அல்லல்களை களைவது இறைவன் அருள். அவன் அருளின்றி இடர்கள் அகலா. அருள் கிட்டின் பகலவன் கண்ட பனி போல் விலகும் என்பது நிச்சயம்.

அடியார்களுக்கு ஏற்படும் இடர்களைக் களையும் இறைவனைப் போற்றித் துதிக்க திருமுறைகளில் மூவர் தேவாரங்களில் நான்கு இடர்களையும் பதிகங்கள் உள்ளன. அத்தகைய பதிகங்கள் திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்கு மங்கையர்க்கரசியின் வேண்டுதல்படி சைவம் தழைத்தோங்கவும், சமணம் விலகவும் புறப்பட்ட திருஞானசம்பந்தரின் பயணத்தின் முன்பு ''நாளும், கோளும்'' சரியில்லையென்று கூறிய அப்பர் பெருமானுக்கு பதிலுரையாக வெளியிட்ட பதிகம் சம்பந்தரின் ''கோளறு பதிகமாகும்''

திருநெடுங்களத்தில் அருளிய ''மறையுடையாய் தோலுடையாய்'' என்ற பதிகமும், ஆவடுதுறையில் அருளிய ''இடரினும் தளரினும்'' எனும் பதிகமும், வடதிருமுல்லைவாயிலில் சுந்தரரின் திருப்பாட்டாக வெளியிடப்பட்ட ''திருவும்'' என்ற பதிகமும் என்பர் சைவ நல்லுலகத்தினர். திருநெடுங்களத்தை முதலில் காண்போம்.

''வேதங்களை உடையவனே! தோலை உடையாகக் கொண்டவனே! நீண்ட சடையின் மேல் வளர்கின்ற பிறைச்சந்திரனை உடையவனே! தலைக்கோல முடையவனே என்று சொல்லி உன்னைத் துதித்தாலன்றிக் குறையுடையார்களுடைய குறைகளுக்குக் காரணமான குற்றங்களை ஆராயாத பெருமானே திருநெடுங்களத்தினை விரும்பிக் கோயில் கொண்டவனே ஒழுக்கத்தினால் உயர்ந்த பெரியோர்களின் இடர்களை நீக்கி அருள் புரிவாயாக'' என்கின்றார் திருஞான சம்பந்தர் தாம் அருளிச் செய்துள்ள திருநெடுங்களம் முதலாம் திருமுறையில்

''மறையுடையாய் தோலுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய்
கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே''

திருநெடுங்களம் -
திருஞானசம்பந்தர் அருளிச் செய்த
1-ம் திருமுறை

நம் இடர்கள் களைய ஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ள முதலாம் திருமுறையை இம்மாத பாராயணப் பகுதியாகக் கொண்டு பாராயணம் செய்து பலன் பெறுவோமாக.

# வைணவம் வாழ்விக்க வந்த பிள்ளைலோகாச்சாரியர்

திருமதி. கோகிலம்மா

பிள்ளை உலகாசிரியரின் 800வது பிறந்த ஆண்டு இது. அதனை ஒட்டி இச்சிறப்புக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.


ஸ்ரீமந் நாராயணன் இவ்வுலகையும், உலக உயிர்களையும் படைத்துக் காத்து அருளும் காருண்ய மூர்த்தி. சேதனர்கள் பகவத் பாகவதத் தொண்டுகளை ஆற்றித் திருநாட்டை அடைய வேண்டுமென்று திருவுள்ளம் பற்றினான். அதற்குத்துணையாக வேத, இதிகாசபுராணங்களையும், மந்திரங்களையும் தோற்றுவித்தான்.

ஆனால் சேதனர்களோ ஈஸ்வரனையும், ஈஸ்வர கைங்கர்யத்தையும் இழந்து, இழந்து விட்டோமே என்ற வருத்தமின்றி சம்சாரமாகிற பெருங்கடலிலே மூழ்கி இறகு ஒடிந்த பறவையைப் போல் நோவுபட்டனர்.

இதைக் கண்டு வருந்தி இவர்களைக் கடைத்தேற்ற வேண்டி, தானே அவதாரம் செய்தும், ஆழ்வார்களையும் அவதாரம் செய்வித்தான். அப்போதும் பலன் குறைவாக, ஆழ்வார்கள் அருளிச் செயலுக்கு விளக்கவுரைகள் எழுதி மக்களிடையே கற்பிக்க ஆசார்யர்களைத் தோற்றுவித்தான்.

ஸ்ரீ வைணவ ஆசாரியர்கள் பரம்பரை

1. பெரியபெருமாள்
2. பெரிய பிராட்டியார்
3. சேனைமுதலியார்
4. நம்மாழ்வார்
5. நாத முனிகள்
6. உய்யக்கொண்டார்
7. மணக்கால் நம்பி
8. ஆளவந்தார்
9. பெரிய நம்பிகள்
10. திருக்கச்சி நம்பிகள்
11. திருக்கோட்டியூர்நம்பிகள்
12. எம்பெருமானார்
13. எம்பார்
14. கூரத்தாழ்வார்
15. பட்டர்
16. நஞ்சீயர்
17. நம்பிள்ளை
18. வடக்குத்திருவீதிப்பிள்ளை
19. பெரிய வாச்சான்பிள்ளை
20. பிள்ளை உலகாசாரியார்
21. கூரகுலோத்துமதாசர்
22. திருவாய்மொழிப்பிள்ளை
23. மணவாளமாமுனிகள்



பிள்ளை உலகாசிரியர் அவதாரம்

நம்பிள்ளையின் சிஷ்யரான வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கும் ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் திருக்குமாரனாக குரோதன வருஷம் ஐப்பசி மாதம் திருவோணத் திருநாளில் திருவரங்கத்தில் கி.பி.1205ல் அவதரித்தார். வடக்குத் திருவீதிப் பிள்ளை திருமணம் ஆகியும் மனைவியுடன் கூடி இல்லற இன்பத்தைப் பெறாமல் வாழ்ந்து வந்தார். இதனால் சந்ததியில்லாமல் போகுமே என்ற பயத்தால் நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளையின் துணைவியை வரவழைத்து, அவரது வயிற்றைத் தமது திருக்கரத்தால் தொட்டு, காஞ்சி பேரருளாளனே வந்து பிறப்பான் என்று வாழ்த்தி, சிஷ்யராகிய வடக்குத் திருவீதிப்பிள்ளையை அன்று ஒருநாள் துணைவியுடன் இல்லற இன்பம் கொள்ள சொன்னார். ஆசாரியரின் கட்டளையை சிரமேற் கொண்டார். அப்படி அவதரித்தவரே பிள்ளை உலகாசிரியர் ஆவர்.

பெயர்க்காரணம்

நம் பிள்ளையின் காலட்சேபக் குழு பெருந் திரளாக இருந்தது. இதைக் கண்டு இது எம்பெருமான் கோஷ்டியோ, நம்பிள்ளை கோஷ்டியோ என்று அனைவரும் வியந்தனர். இதைக் கண்ட, பிறர் மினுக்கம் பெறாத, கந்தாடை தோழப்பர் அவரை அவமதித்தார். முதலியாண்டான் சீரிய குலத்து ஒருவர் தன்னை அவமதிக்க நேரிட்டதே என்[illegible]ருந்தினார் நம்பிள்ளை. அன்று இரவு நம்[illegible]ந்தாடை தோழப்பரிடம் மன்னிப்பு [illegible] அவரது

திருமாளிகைக்குச் சென்று வாசலில் காத்திருந்தார்.

கந்தாடை தோழப்பரின் துணைவியார் அவரது செயலைக் கண்டித்து, நம்பிள்ளையிடம் மன்னிப்பு கேட்க அழைத்துக் கொண்டு வாசல் கதவைத் திறந்தார். அப்போது நம்பிள்ளை அவரது திருவடிகளில் வணங்கி மன்னிப்பு வேண்டினார். வைதாரை வாழ்த்தும் மனப்பக்குவம் பெற்ற நம்பிள்ளையின் செயல், கந்தாடை தோழப்பரின் மனதைப் பெரிதும் வாட்டி வதக்கியது. நம்பிள்ளையின் சீரிய பண்பினைக் கண்ட தோழப்பர் உள்ளம் நெகிழ்ந்தது. அவரைப் போற்றி நீர் தான் உலகாசிரியர், பிள்ளை உலகாசிரியர் என்று போற்றி வணங்கினார். இதுவரை ஒரு சிலருக்கு மட்டும் நீர் ஆசிரியாராக இருந்தீர். இன்று முதல் நீர் உலகுக்கே ஆசிரியர். பிள்ளை உலகாசிரியர் என்று பெயரிட ''உலகாசிரியரானார்''.

ஆச்சாரியரின் அருளாசியால் அவதரித்த தமது பிள்ளைக்கு, வடக்குத் திருவீதிப்பிள்ளை ஆச்சாரியரின் பக்தியினால் அவரது பெயராகிய ''உலகாசிரியர்'' என்று பெயரிட்டு மகிழ்ந்தார். இதனை மாமுனிகள் திருவாக்கால் அறியலாம்.

''பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை அன்பால்
அன்ன திருநாமத்தை ஆதரித்து - மன்னுபுகழ்
மைந்தர்க்குச் சாத்துகையால் வந்து பரந்ததெங்கும்
இந்தத் திருநாமம் இங்கு''

(உ.ர.மா. - 52)

உலகோர்க்கு மட்டும் ஆசாரியராக இல்லாமல் வைணவ உலகுக்கு ஓர் ஒப்பற்ற ஆசாரியராக விளங்கினார் பிள்ளை லோகாச்சாரியார்.

உலகாசிரியர் தொண்டு

எந்தை தந்தை, தந்தை தந்தை, தம் மூத்தப்பன் ஏழ்படி கால்தொடங்கி வந்து வழி வழி ஆட் செய்கின்றோம் எனும் பெரியாழ்வார் அருளிச் செயலுக்கிணங்க வைணவ உலகுக்குப் பெருந்தொண்டாற்றிய பெருந்தகை.

கரை கடந்து பாயும் வெள்ளம் போல், பிள்ளை உலகாசிரியரின் பிரம்மசரியமும், ஞானக் கூர்மையும் பரந்த கருணை உள்ளமும், உலகு உய்வுக்கு உடலான உபதேசங்களும் நம்மால் மறுக்கவும், மறைக்கவும், மறக்கவும் முடியாதவை ஆகும்.


உலகாசிரியர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்ற தம்பியையும் பெற்றிருந்தார். இவர் ''ஆசார்ய இருதயம்'' என்ற நூலை அருளினார்.

பிள்ளை உலகாசாரியரை அடைந்தவர்களில் கூரகுலோத்தமதாசர், மணற் பாக்கத்து நம்பி, கொல்லி காவலதாசர், கோயிலண்ணர், திருவாய் மொழிப்பிள்ளையின் தகப்பனாரண்ணர், திருவாய் மொழிப்பிள்ளை, அவர் திருத்தாயார், விளாஞ் சோலைப்பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயினார் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

பிள்ளை உலகாசாரியர் நம் பெருமாளுக்குத் தொண்டு செய்து, உயிர் போன்றவராய் வாழ்ந்த காலத்தில், முகலாயர்கள் படையெடுத்து, கோயில்களைப் பாழ்ப்படுத்தி வந்தனர். அவர்கள் திருவரங்கத்தை நெருங்கி விட்டார்கள் என்ற செய்தி வந்தது. பெருமாள் திருவிழா கண்டருளிக் கொண்டிருந்தார். அனைவரையும் அப்படியே இருக்கச் செய்து திரையிட்டு பெருமாளைச் சிறு பல்லக்கில் எழுந்தருளச் செய்து ஒரு அர்ச்சகருடன் வெளியே புறப்படச் செய்தார். பிள்ளை உலகாசிரியரும் உடன் சென்றார். மற்றவர்கள் செய்தி அறிந்து மூலவப் பெருமாளுக்கும் தாயாருக்கும் முன்னே சுவர்

# இம்மாதப் பாராயணப் பாசுரம்

# திருப்பல்லாண்டு



பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி
ரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்டதிண் தோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு
அடியொ மோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துணை
யும்சுடர் ஆழியும் பல்லாண்டு
படைப்போர் புக்கு முழங்கும்அப்
பாஞ்ச சன்னியமும் பல்லாண்டு.



எழுப்பி, அதன்முன் வேறு திருமேனிகளை எழுந்தருளப்பண்ணினர்.

காட்டுவழியில் திருவரங்கன் செல்லும் போது சில வஞ்சகர்கள் குறுக்கிட்டனர். அவர்களிடம் இருந்து தந்திரமாகத் தப்பித்து. ஜோதிஷ்குடி என்ற கிராமத்தை அடைந்தனர். அங்கு உலகாசிரியர் நோய்வாய்ப்பட்டார். தம் சீடர் விளாஞ்சோலைப் பிள்ளையை திருவனந்தபுரம் சென்று நித்தியவாசம் செய்யும்படி அனுப்பினர். நம் பிள்ளை திருவடிகளை நினைத்தபடியே அங்கேயே திருநாட்டிற்கு எழுந்தருளினார். பிள்ளை உலகாசிரியர். பெண்ணும் பேதையும் அறியும்படி இரகசிய அர்த்தங்களையெல்லாம் கீழ்க்காணும் சிறியதும் பெரியதுமான பதினெட்டு நூல்களாக அருளிய பெருமை உடையவர். அவர் இன்றும் பல நூல்கள் அருளி இருந்தாலும் நமக்கு இப்பொழுது கிடைப்பவை இவை.


பிள்ளை உலகாசாரியர் அருளிய இரகசிய நூல்கள்

1. முமுட்சுப்படி
2. தத்வத்ரயம்
3. அர்த்தபஞ்சகம்
4. ஸ்ரீவசனபூஷணம்
5. அர்ச்சிராதி
6. பிரமேயசேகரம்
7. பிரபந்த பரித்ராணம்
8. சாரசங்க்ரகம்
9. சம்சாரசாம்ராஜ்யம்
10. நவரத்னமாலை
11. நவவித சம்பந்தம்
12. யாத்ருச்சிகப்படி
13. பரந்தபடி
14. ஸ்ரீயபதிபடி
15. தத்துவசேகரம்
16. தனித்துவயம்
17. தனிச்ரமம்
18. தனிபிரணவம்
19. நாலுவார்த்தை

இந்நூல்களில் மிகச்சிறப்பு வாய்ந்தவை ஸ்ரீவசனபூஷணம், முமுட்சுப்படி, தத்வத்ரயம், அர்த்தபஞ்சகம் ஆகும். மற்றவைகளும் சிறப்புடையவைகளே. இந்நூல்களைப் பெற்று பயின்று ஆழ்பொருள்களையும் மறை பொருள்களையும் அறிந்து பயன் பெறுவோமாக.

''அத்திகரி அருளாளன் அனுமதியோன் வாழியே!
ஐப்பசியில் திருவோணத்து அவதரித்தான் வாழியே!
முத்திநெறி மறைத் தமிழால் மொழிந் தருள்வோன் வாழியே!
மூதரிய மணவாளன் முன்புதித்தான் வாழியே!
நித்தியம் நம்பிள்ளை பதம் நெஞ்சில் வைப்போன் வாழியே!
நீள் வசன பூடணத்தால் நியமித்தான் வாழியே!
உத்தமமாம் உடும்பை நகர் உதித்த வள்ளல் வாழியே!
உலகாரியன் பதங்கள் ஊழிதொறும் வாழியே!
ஆழ்வார், எம்பெருமானார், ஜீயர் திருவடிகளே சரணம்!

# வைகாசி விசாகத் திருவிழா



சித்திரை மற்றும் வைகாசி மாதங்கள் வசந்த காலங்கள் ஆகும். சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களில், இம்மாதங்களில் வசந்த விழாக்கள் கொண்டாடப்படுகிறது. வசந்த விழா இம்மாதங்களில் 10 நாட்கள் நடைபெறும். முழு நிலவுடன் கூடிய சித்திரை நட்சத்திரத்தில் சித்திரை திருவிழா முடிவடையும். வைகாசியில் முழு நிலவுடன் கூடிய விசாக நாளில் முடிதல் சிறப்பு. வைகாசி விசாகத் திருநாள் முருகப் பெருமான் அவதரித்த திருநட்சத்திரத் திருநாள் ஆகும்.

உமா தேவியார் சரவணப்பொய்கையில் ஆறுமுகப் பெருமானுக்குப் பால் ஊட்டும் போது அப் பால் பொய்கையில் வழிந்தது. பராசர முனிவரது மக்கள் மீனைப் பிடித்து விளையாடியதால் தந்தையின் சாபம் பெற்று சரவணப்பொய்கையில் மீன்களாகித் திரிந்து கொண்டிருந்தனர். வழிந்த பாலைப் பருகியதும் அவர்கள் சாபம் நீங்கி முன்னை வடிவம் பெற்றனர் என்பர். முருகப் பெருமான் வைகாசி விசாகத்தன்று பராசர முனிவரது குமாரர்களுக்கு சாப விமோசனம் அளித்தருள்கிறார்.

இந்நாளில் முருகப் பெருமானை வழிபட்டால் ஆண்டு முழுவதும் முருகனை வழிபட்ட பயன் பெறுவர் என்பர். வைகாசி விசாக நன்னாளில் முருகப் பெருமானை வழிபட்டு இறையருள் பெறுவோமாக.

# மனக்கோயில் கொண்ட மகாதேவன்

கே. பாலசுந்திரி, எம்.ஏ.

ஆலயம்!

நம் இதயம் இசைக்கும் பக்திலயமும். இறைவனின் கருணை லயமும் இணைந்தால் நம் இதயக்கோவிலில் இறைவன் குடியேறுவான். இதனையே

''உள்ளப் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச்சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலன் ஐந்துங் காளாமணிவிளக்கு''
- திருமூலர்

என்கிறது திருமந்திரம்.

அல்லும் பகலும் இறைவனை மனதில் ஏத்தி வைத்து அன்போடு நம்பிக்கையோடு பூசித்து வந்தால் அவன் நம் இதயக் கோவிலில் எழுந்தருள்வான். உதாரணமாக கோவிலில் தீபாராதனையைக் கண்டு களிக்கிறோம்.கண்மூடி ஜபிக்கிறோம். அதை எப்போதும் அகக்கண்ணில் கண்டு களிக்கிறோம். இது எப்படி சாத்தியம் ஆகிறது.

தீபாராதனை என்பது போட்டோ எடுக்கும் போது ஏற்படும் பிளாஷ் ஒளி போன்றது. அந்த ஒளியில் விக்ரத்தின் உருவம் நம் கண்கள் எனும் காமிராவால் படம் பிடிக்கப்பட்டு நமது இதயம் என்ற இருட்டறையில் கழுவப்படுகிறது. இதை மற்றவர்க்குக் காட்ட முடியாது. ஆயினும் நம்மால் நன்கு உணர முடியும்.



இப்படித் தன் மனதில் கண்ட இறைவனுக்குத் தன் மனதிலேயே கோயில் கட்டிய அன்பர் ஒருவர் உண்டு. அவர் இதயக் கோவில் குடமுழுக்குக்காக அரசன் அமைத்தக் கோவிலின் குடமுழுக்கைத் தள்ளி வைக்கச் சொன்னான் இறைவன். இது நடக்க முடியுமா என யோசிக்கும் நமக்கு பாரதி பதில் கூறுகிறான்.

''பாவித்தல் போதுமே பரமநிலை யெய்துதற்கே'' - பாரதி

ஆம்!

கற்பனை செய்தால் போதும் நம் காரியம் கைகூட. இந்த அற்புதத்தை நிகழ்த்துவது நமது ஆழ்மன எண்ணங்கள். இப்படி நமது உயர்வான லட்சியங்கள் பற்றித் தினமும் புலனறிவினால் கற்பனை செய்தால், அது நமது ஆழ்மனதில் படக்காட்சியாய்ப் பதிகிறது. அந்த ஆழ்மன எண்ணங்கள் எப்படியோ பிரபஞ்சஅறிவுடன் தொடர்பு கொண்டு காரியங்கள் நிகழ்கின்றன. ஒத்த எண்ணமுடையவரை ஈர்க்கின்றது. அவர்களின் உதவி கிடைக்கின்றது. நமது லட்சியம் நிறைவேறுகிறது. சில சமயம் கனவுகள் - உள்ளுணர்வு மூலம் வழி காண்கிறோம். இதனையே தெய்வாதீனம் என்று குறிப்பிடுகிறோம் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இது பற்றி டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி அவர்கள் தனது ''எண்ணங்கள்'' என்ற நூலில் விரிவாகக் கூறியிருக்கிறார்.

இதனையே எண்ணம் போல் வாழ்வு - எதுவாக நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் என முன்னோர்கள் மறைமுகமாகக் கூறி இருக்கின்றனர்.

இப்படித் தன் லட்சியமானக் கோவிலை நனவில் கட்ட முடியாத நிலையிலும் கனவிலேயே கட்டி முடித்தவர் பூசலார். சான்றோர் உடைத்த தொண்டை நாட்டில் திருநின்றவூரில் பிறந்தவர். அவரே திருவாகிச் சிறக்கப் போகிறார் என்பதால் முன்னமே அப்படிப் பொருத்தமான பெயர்அமைந்ததா?

திருநின்றவூரில் இறைவனுக்குத் திருக்கோவில் அமைக்க ஆசை. அந்த ஆசைபற்றியே அசைபோடும் மனம். மனம் விரும்பிய கோவில் கட்டத் திருமகள் மனம் இசையவில்லை எனவே வறுமை வாட்டியது.

ஆயினும் வளமான மனம். நனவுக் கோயிலைக் கனவில் கட்ட முற்படுகிறார். ஆசையைத் தனது ஆழ்மனதில் விதைக்கிறார்.

''மெய்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சிப்
தம்மையுள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேயிலிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில்
சிவகதி விளையும்அன்றே - நாவுக்கரசர்

தன் மனதாலேயே பொருள் சேர்த்தார். இடம் தேர்வு செய்தார். ஆகம விதிப்படிக் கோவில் கட்ட ஆரம்பித்தார் சிற்பிகள். சாத்திர வல்லுநர்கள், தொழிலாளிகள் அனைவரையும் மனதாலேயே தேர்வு செய்தார். சிற்ப சித்திர வேலைப்பாடுகள் அனைத்தையும் மனதிலேயே வடிவமைத்தார். திருக்குளம் - கொடிமரம் - இறைஉருவம் அனைத்தும் கற்பனையிலேயே வடித்தார்.

இடையிடையே பணத்தட்டுப்பாடு - ஆள் தட்டுப்பாடு என்ற நடைமுறை விஷயங்களையும் கற்பனை செய்தார். ஆண்டுகள் பல ஆயின. ஆலயத்தைக் கட்டி முடித்துஆலயத்திற்குக் குடமுழுக்கு செய்ய நாள் குறித்தார் கற்பனையில்தான். பூசலாரின் புதிய பூசனை முறைகளை உலகுக்கு உணர்த்த திருஉளம் கொண்டான் இறைவன். அப்போது பல்லவ மன்னர் ஒரு கோயில் எழுப்பித்து இருந்தான். அதற்குக் குடமுழுக்கு நடத்தப் பூசலார் தெரிவு செய்த நாளையேத் தேர்வு செய்து இருந்தான்.

இறைவன் மன்னன் கனவில் தோன்றினார். ''குடமுழுக்கு செய்ய வேறொரு நாள் குறிப்பிடுக. அன்றைய தினம் பூசலாரின் குடமுழுக்கைத் திருநின்றவூரில் யாம் ஏற்க வேண்டும்'' என்று அருளி மறைந்தார். மன்னன் திடுக்கிட்டு விழித்தான். எங்கும் நிறைந்த இறைவன் அன்று வர இயலாது என்று கூறியது கண்டு அதிசயித்தான்.

அதிசயக் கோயிலைக் காண அரசன் தன் பரிவாரங்களோடு திருநின்றவூர் விரைந்தான். கோயில் இல்லை ; கும்பாபிஷேகப் பணிகள் இல்லை. குழம்புகிறான். பூசலார் கட்டிய கோயில் எங்கு உள்ளது என விசாரிக்கிறான். கோயிலா? என திகைத்த ஊரார் பூசலாரிடம் மன்னனை அழைத்துச் செல்கின்றனர்.

மன்னன் தன் கனவினை உரைக்கப் பூசலார் தயங்கித் தயங்கி தனது மனக்கோயிலை விவரிக்க, தாங்கள் கற்பனை செய்த கோயிலைப் போன்ற வடிவிலேயே நான் அமைத்த கோயிலும் என மன்னன் சிலிர்க்க தனது கனவை நனவாக்கிய இறைவனின் கருணைத் திறத்தை எண்ணி எண்ணி உருகினார் பூசலார். தன் மனக் கோயில் கொண்ட மகராஜனை வழிபட்டு இறையருள் பெற்றார். திருநின்றவூரில் ஒரு சிவாலயம் அமைக்கச் செய்தான் மன்னன். இறைவன் பெயர் ''இருதயாலீஸ்வரர்''. எத்தனைப் பொருத்தமான பெயர். பூசலாரின் கனவை நனவாக்கினார் மகேஸ்வரன்.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''
- குறள்

## வாசகர் கருத்து

மயிலை திருவிழாக்கள் அன்றும் இன்றும் கட்டுரை படித்தேன் 1000 ஆண்டுகளாய் தொடர்ந்து இன்றளவும் வெகு விமரிசையாக நிகழ்ந்து வரும் மயிலை திருவிழாக்கள் பற்றியும், அதன் மகோன்னதங்கள் பற்றியும் வெகு சிறப்பாக விவரித்த கட்டுரை மலைப்பில் ஆழ்த்தி மனதைப் பரவசப்படுத்தி விட்டது.

- த.சத்தியநாராயணன்
ஐ.சி.எப் கிழக்கு காலனி
அயன்புரம்
சென்னை - 38

மதுரை அரசாளும் மீனாட்சியே! 'பார் போற்றும் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்' ஆகிய கட்டுரைகள் பக்திச்சுவை ததும்பும் அற்புதக் கட்டுரைகள், நோய் தீர்க்கும் அதிசய தலமரம், உடும்பும் சிவபக்தியும், திருவிளையாடல் புராணம் ஆகிய கட்டுரைகள் படிக்கச் சுவையாக இருந்தன. மகாபாரதம், திருமந்திர உபதேசம் ஆகிய தொடர்கள் ஆன்மீகத் தேனாய் இனித்தன. வண்ணப் பக்கங்களுடன், பெட்டிச் செய்திகளும், கேள்வி பதிலும் பயனுள்ள பகுதிகள். இறையருள் ததும்பும் திருக்கோயில் இல்லந்தோறும் இருக்க வேண்டிய இனிய இதழ் என்றால் அது மிகையல்ல.


- பி.வி.கிரி
முன்னாள் உதவியாசிரியர் 'தமிழரசு'
சென்னை- 102.



# தலமர வழிபாடும் தாவர இனப் பாதுகாப்பும்

மா. குணசேகரன்
சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று மையம், ஆனைகட்டி, கோயம்புத்தூர்

உலகில் உயிர்கள் தோன்றியது முதல், மனித இனம் தோன்றும் வரை இயற்கை ஓர் சமன்பாட்டை நிலைநிறுத்தி வந்துள்ளது. ஆனால் மனிதன் தோன்றிய பின்னும் அவன் படிநிலை மலர்ச்சி தொடர்ந்த போதும் பெரும்பாலான இயற்கை செல்வங்கள் அழியத் துவங்கியது. மக்கள் தொகை பெருக்கமும், தொழில் மயமாக்கலும் இவ்வழிவை துரிதப்படுத்தும் இரு பெரும் காரணிகளாகத் திகழ்ந்தன. இதன் விளைவாக சுற்றுச் சூழல் மாசுபாடும், இயற்கை வளம் சுரண்டலும் தொடர்ந்தன. இயற்கை வாழிடங்கள் அழியத் துவங்கியவுடன் உயிர்பன்மையமும் அழியத்துவங்கியது. மனித அறிவுக்கு எட்டுவதற்கு முன்பே பல தாவர, விலங்கினங்கள் உலகிலிருந்து முற்றிலும் அழிந்து விட்டன.



இது தொடர்பாக ஆய்வாளர்களின் கூற்று மேலும் அச்சமூட்டுவதாகவே உள்ளது. வரும் 30 ஆண்டுகளில் மேலும் 60,000 தாவர இனங்கள் உலகிலிருந்து முற்றிலும் அழிக்கப்பட்டு விடும் என்பது ஆய்வாளர்களின் கணிப்பு. இன்றைய சூழ்நிலையில் உலகம் முழுவதும் சுற்றுக்சூழல் மாசுபாடு குறித்தும், உயிர்பன்மையும் அழிவது குறித்தும் நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

சூழலியல் பாதுகாப்புக்கு அரசும், அரசு சாரா அமைப்புக்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் பெரு முயற்சி எடுத்து வருகின்றனர். பல்வேறு வகையான திட்டங்கள் மூலம் இவை செயல்படுத்தப்படுகின்றன. மரபணு வங்கி, நீண்ட நாள் விதையுறக்கம் தொடங்கி புகழிடங்கள் முதல் சூழலியல் மண்டலங்கள் நிறுவுதல் வரை பல முயற்சி மேற்கொள்ளப்படுகின்றன. இத்தனை முயற்சிக்குப் பின்னும் பல தாவர இனங்கள் அழிந்து கொண்டு வருகின்றன என்பது தான் வேதனையான உண்மை. நம்மால் பல தாவர இனங்களை அழிவிலிருந்து காப்பாற்ற முடியவில்லை.

ஆனால் இதற்கு மாறாக நமது முன்னோர்கள் செயல்படுத்திய தாவர பாதுகாப்பு உத்திகள் கண்டு ஆன்மீகத்தோடு அறிவியல் உலகமும் வியந்து நிற்கிறது. அது தான் நமது திருக்கோயில்களில் நடைபெறும் 'தலமர வழிபாடு'. இது இன்று பல தாவர இனங்களை அழிவுப்பாதையிலிருந்து காத்து நிற்கிறது என்றால் அது மிகையில்லை.

## இயற்கை வழிபாடு

ஆதி மனிதன் இயற்கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டே தன் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டான். அவன் உணவுக்கும், உடைக்கும் தாவர விலங்கினங்களும், அவன் வாழிடங்களுக்கு மரங்களும், மலைக் குகைகளும் பயன்பட்டன. குடிப்பதற்கும், விவசாயத்திற்கும், ஆறுகளும், குளங்களும் பயன்பட்டன. இந்த இயற்கைப் பொருட்களுக்கு உயிர் இருப்பதாயும், இவற்றில் ஆவிகள் உறைவதாயும் நம்பி இவற்றை வழிபடத் தொடங்கினான்.

## மரவழிபாடு

ஆதி மனிதனின் பல்வகைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் மரங்களே முதன்மையாகத் திகழ்ந்தன. இதுவே அவன் மரத்தை வழிபட முக்கிய காரணமாய் அமைந்தது எனலாம். இறந்து விட்ட முன்னோர் ஆவி மரங்களில் உறைவதாய் நம்பியும் இவ்வழிபாடு தொடர்ந்தது. இந்த ஆவிகளை சாந்தப்படுத்த பலிகளும் இடப்பட்டன.

## நடுகல் வழிபாடு

ஊருக்காக இறந்துபட்ட வீரர்களின் நினைவாய் நடப்பட்ட கற்களும் மரங்களின்

அடியில் நடப்பட்டது. இந்த நடு கற்களுக்கு வழிபாடு செய்யப்பட்ட போது மரங்களுக்கும் வழிபாடு நடந்தது. தொடர்ந்து நட்ட கல்லும், மரமும் வழிபடப்பட்டு, புனித மரத்தின் அடியில் உருவ வழிபாடு ஆனது.

குலக்குறி


பின்னாளில் இவ்வழிபாடு குலக்குறியாக மலர்ந்தது. பெரும்பாலான கூட்டங்களுக்கும், குலங்களுக்கும் ஒரு தாவரம் குலக்குறியாக படிமலர்ச்சியடைந்தது. மனித இனம் நாகரீக வளர்ச்சியடைந்து அரசுகள் அமைக்கப்பட்ட போதும் இம்முறை தொடர்ந்தது. அரசுகளுக்கு குலக்குறியாக அமைந்த மரங்கள் 'கடிமரம்' (காவல் மரம்) என அழைக்கப்பட்டது. சேரனுக்கு பனையும், சோழனுக்கு ஆத்தியும், பாண்டியனுக்கு வேம்பும் கடி மரமாய் திகழ்ந்தன. புனித மரமான இம்மரத்திற்கு அல்லும், பகலும் வீரர்களைக் கொண்டு காவல் போடப்பட்டது. சங்க இலக்கியங்கள் பலவற்றில் இச்செய்தி உள்ளது. அந்நாளில் எதிரி நாட்டுக்கு சென்று கடிமரத்தை வெட்டி சாய்ப்பது பெருவீரமாய் இருந்தது.

''உறு செறுநர்புலம்புக்கு அவர்,
கடிகாவின் நிலை தொலைச்சி -
மதுரைக் காஞ்சி'' - 153

''வாடா நாவில் நவிநயம் பைதலின் ஊருதோறும்
கடிமரம் துலங்கிய காவு நாடு நகர் -
புறநானூறு'' - 23

மர வழிபாடு உலகம் முழுவதும் இருந்து வந்துள்ளது. அந்தந்த வாழுமிடங்களுக்குத் தக்க மரங்கள் வழிபாட்டில் இருந்துள்ளது. எகிப்தில் பேரிச்சைமரங்களும், ஐரோப்பாவில் ஆலிவ், ஓக் மரங்களும், ஆப்பிரிக்காவில் பாபாப் மரங்களும் வழிபடப்பட்டதைத் தொல்லியல் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி திராவிட நாகரீகங்களில் அரசமரமும், இலையும் வழிபடு பொருளாய் இருந்ததை அகழ்வாய்வில் கிடைத்த களிமண் அச்சுக்கள் மூலம் அறிகின்றோம்.

மானிட இனம் நாகரீக வளர்ச்சி அடைந்த பின் மன்னருக்கும் மேலானவன் இறைவன் எனும் உண்மை உணரப் பெற்ற பின் மன்னர் மரபுகள் கோயில்களில் பின்பற்றப்பட்டது. அனைத்திலும் சிறந்தவைகள், இறைவனுக்குப் படைக்கப்பட்டன. கோயில் எனும் சொல்லே 'கோ+இல்' என்றும், மன்னர் வாழிடம் என்றும் பொருள்படும். மரத்தடி வழிபாட்டிடங்கள் மெல்ல, மெல்ல வெட்டுக்கோயில்களாக, கட்டுக்கோயில்களாக, மாடக்கோயில்களாக மலர்ந்த போது இம்மரங்கள் புனித மரங்களாகப் போற்றப்பட்டு வழிபாடு தொடர்ந்தது. பெரும்பாலான கோயில்களில் தெய்வங்கள் மரங்களுக்குக் கீழேதான் முதலில் அறியப்பட்டதாக பலதல புராணங்களும் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. கோயில் கட்டிடக்கலை பல படிநிலை மலர்ச்சியடைந்து பெரும் கோயில்களாக மலர்ந்த போதும் இத்தல மர வழிபாடு தொடர்ந்தது.




ஒரு தாவரத்தைக் கோயிலின் மூலவருக்கு இணையான புனிதத்துடன் வழிபட்டு வருவது தலமர வழிபாட்டின் சிறப்பு ஆகும். இவ்வகை தாவர வழிபாட்டு முறை உலகில் எங்கும் இல்லை. மேலும் இவ்வழிபாட்டில் தாவரத்தின் எல்லா வகைகளும் (செடி, கொடி, சிறுமரம், மரம், புல்) உள்ளது.

தலமர வழிபாடு சிவாலயங்களில் தவறாமல் கடை பிடிக்கப்பட்டு வந்துள்ளது. பக்தி இலக்கியங்களான தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யபிரபந்தம் இவற்றில் இறைவனின் பெருமையுடன் தலமரங்களைப் பற்றிய வருணனைகளும் பெரும் எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளது.

திருப்பெருந்துறையில் இறைவன் குருந்தை மரவடிவிலேயே காட்சியளிப்பதாக மாணிக்க வாசகர் அருட்பத்து பதிகத்தில் குறிப்பிடுகிறார்.

''செழுமலர்க் குருந்தமே வியசீர் ஆதியே''
*-459.....466*

தேவார ஆசிரியர் மூவரும் தலமரத்தின் வருணனையை பல இடங்களில் குறிப்பிடுகின்றனர்.

திருவோத்தூரில் ஞானசம்பந்தர் தேவாரம் பாடி ஆண் பனை மரத்தில் காய்கள் காய்க்க வைத்ததாக தேவாரமும், தல வரலாறும் குறிப்பிடுகின்றது.

''குரும்பை யாண்பனையீன் குலையோத்தூர்''

பல திருத்தலங்களில் ஞானசம்பந்தர் தலமரத்தைக் குறிப்பிடுகின்றார்.

திருமயேந்திரப்பள்ளி பதிகத்தில்

''கண்டலும் கைதையுங் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப்பள்ளி''
என்று பாடுகின்றார்.

திருமயிலைப் பதிகத்தில் ''மட்டிட்ட புன்னய கானல் மட மயிலை'' - 1384ல்

திருகருகாவூர் பதிகத்தில் முல்லை பற்றி கீழ்காணும் வரிகள் வருகின்றது.

''கமுத முல்லை கமழ்கின்ற கருகாவூர்''
-516, 2:3

''கடிகொண்ட முல்லை கமழுங் கருகாவூர்'' -516, 4:3

திருமருகல் பதிகத்தில்

''வாழை காய்க்கும் வளர் மருகனாட்டு மருகலே''
1528, 1:4 என்கிறார்.

திருமால் கோவில் தலமரங்களின் வருணனைகள் நாலாயிரத் திவ்ய பிரபந்தங்களில் பலவிடங்களில் சுட்டப்படுகின்றது. திருவெள்ளியங்குடி வாழை பற்றி பின்வருமாறு வருகிறது.

''ஊற்றிடை நின்ற வாழையின் கனிகளுழ்த்து வீழ்ந்தனவுண்டு மண்டிச்

சேற்றிடைக் கயல்களுகள் திகழ் வயல்சூழ் திருவெள்ளியங்குடியதுவே'' - 65, 6:3-4.

திருப்புலியூர் தலமரம் புன்னை பற்றி பின்வருமாறு வருகிறது.

''புன்னையம் பொழில்சூழ் திருப்புலியூர்''
- IV 140, 2:4.

திருச்சிரீ வரமங்கை தலமரம் மா பின் வருமாறு சுட்டிக்காட்டப்படுகிறது.

''தேனமாம் பொழில் சிரீவர மங்லத்தவர் '' - IV 84, 6:3 என பல தலங்களின் தலமரங்கள் பலவகைகளில் பக்தி இலக்கியங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

### தலமர வழிபாட்டில் நம்பிக்கைகள்

பண்பாட்டு பெருமைமிக்க இந்த தலமர வழிபாடு தொன்றுதொட்டு நிலைக்கும் காரணத்தை ஆய்வோமானால் பல உண்மைகள் விளங்கும். நூற்றுக்கு மேற்பட்ட தாவர இனங்கள் தற்போது தலமர வழிபாட்டின் மூலம் பாதுகாப்பாக கோயில் வளாகத்தில் உள்ளது. பல தாவர இனத்தை கோயிலுக்கு வெளியே அழித்துக் கொண்டிருக்கும் மனிதன், கோயிலுக்கு உள்ளே அதன் புனிதத்துவம் கருதி அதைப் பாதுகாத்து வருகிறான். இதற்கு மானிட நம்பிக்கைகளும், அதை ஒட்டிய சடங்குகளுமே காரணிகளாய் விளங்குகிறது. பெரும்பாலான தலமரங்கள் மருத்துவ மகிமை உடையவை. பல கோயில்களில் இறைவன் வழிபாடு முடிந்தபின் இம்மரத்தின் இலைகள், பூ, காய் முதலியவை காணிக்கைப் பொருளாகப் பயன்படுத்தி, பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக வழங்கப்படுகிறது. இது பல நோய் தீர்க்கும் தன்மையுடையது. திருமணமாகாத இளைஞர்களும், யுவதிகளும், தத்தம் நாள், கோள்களுக்கேற்ற குறிப்பிட்ட தலத்திலுள்ள மரத்தில் மஞ்சள் கோர்த்து கயிறு கட்டும் போது விரைவில் திருமணம் நடைபெறும் என்பது சோதிட நம்பிக்கையாகும்.


திருமணம் முடிந்து நாள்பட்ட தம்பதியர் தத்தம் நாள், கோள்களுக்கு ஏற்ப தலமரத்தில் சிறிய தொட்டில்களைக் கட்டினால் விரைவில் குழந்தை பிறக்கும் என்பது நம்பிக்கை. மானிடவியலார்கள் இவ்வகை சடங்குகளை பாவனை சடங்குகள் என வகைப்படுத்தியுள்ளனர்.

சில கோயில்களில் பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை இறைவனிடம் வேண்டிவிட்டு தலமரத்தின் இலைகளில் முடிச்சுப் போட்டு விடுகின்றனர். இதனால் அவர்கள் கோரிக்கைகள் விரைவில் நிறைவேறும் எனவும் அதன்பின் அவர்கள் அந்த இலை முடிச்சைஅவிழ்த்து விட்டு இறைவனுக்கு காணிக்கைகள் செலுத்த வேண்டும் என்பது நம்பிக்கை. இன்னும் சில கோயில்களில் பக்தர்களின் கோரிக்கைகள் துண்டுக் காகிதங்களில் எழுதித் தலமரங்களில் கட்டி வழிபாடு செய்யும் முறையும் உள்ளது. இவ்வாறு செய்தால் தங்கள் வேண்டுதல்கள் இறைவனை அடைவதாக பக்தர்கள் நம்புகின்றனர். இவை போன்று பலவகை நம்பிக்கைகளும், அது சார்ந்த சடங்குகளும் தான் தலமரங்கள் திருக்கோயில்களில் நிலைத்து வாழக் காரணிகளாக அமைகின்றது என்றால் அது மிகையில்லை.

கொடுமுடியில் உலகின் மிகப்பெரிய வன்னிமரம் வழிபாட்டில் உள்ளது. இதன் ஒரு கிளையில் முள் இருக்கிறது. மற்ற கிளையில் முள் இல்லை. இதன் சுற்றளவு 14 அடி உள்ளது. இது போன்ற பல சிறப்புக்கள் உள்ள மரங்கள் தலமர வழிபாட்டின்மூலம் பாதுகாக்கப்படுகிறது.

### தலமர வழிபாட்டின் அறிவியல் சார்ந்த நன்மைகள்.

பெரும்பாலான கோயில்களில் தலமரங்கள் நன்கு வேலியிட்டு நீர்பாய்ச்சிப் பராமரிக்கப்படுகின்றது. இந்த இனங்களில்சில அழிவு நிலையிலும், பல கோயில்களில், பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள் மற்றும் மரங்களில் வாழும் சிறு உயிரினங்களுக்கு உணவும், உறையுளும் கொடுத்துக் காத்து வருகிறது. பழம்பெருமைமிக்க இந்த தலமர வழிபாட்டின் மூலம் தமிழகம் ஒரு மகத்தான நன்மையைச் செய்து வருகிறது. நூற்றுக்கு மேற்பட்ட புல், செடி, கொடி மற்றும் மர இனங்கள் கோயில்களில் போற்றி பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதில் பல இனங்கள் கோயிலின் சுற்றுப்புறங்களில் அழிந்து விட்ட நிலையில் இந்த அரும்பணியை செய்து வரும் திருக்கோயில்கள் ஒரு பாரம்பரிய மரபணு வங்கியாக செயல்பட்டுவருகின்றது என்றால்அது மிகையில்லை.



# நாரணப் பிள்ளையார் கும்மி

இரா. தமிழ்வேந்தன் எழில்
திருகோயில் நிர்வாக அதிகாரி (ஓய்வு)

கும்மி யடிப் பெண்கள் கும்மியடி நம்ம
குஞ்சரப் பிள்ளையார் பேரைப்பாடி
இம்மி யளவேனும் துன்பமில்லை - இங்கு
இன்பக் கடலுக்கோ பஞ்சமில்லை

பிள்ளையார்ப் பேர்சொல்லிக் கும்மியடி -
அவன் பேரருள் போற்றியே கும்மியடி
அள்ளக் குறையாத நாரணப் பிள்ளையார்
அன்பினை வாழ்த்தியே கும்மியடி

நாரணப் பிள்ளையார் பேரைப் பாடி -
மண்ணில் நல்வாழ்வு பெற்றிட கும்மியடி
காரணக் காரியம் தேடிடாமல் - அவன்
காலடிப் பற்றிடக் கும்மியடி

தோரணம் கட்டியே பந்தலும் நாட்டியே
தொல்புகழ்ப் பாடியே ஆடிடுவோம்
பூரணக் கும்பத்தால் வாரணம் ஓட்டியே
பிள்ளையார் நல்லருள் வாங்கிடுவோம்

பாவ இருளினைப் போக்கிடக் கூவத்தில்
சூரியன் போலவே வந்தவனாம்
சாபங்கள் கோபங்கள் அண்டிடாமல் -
என்றும் சந்தோஷ வாழ்க்கையைத்
தந்தவனாம்.

தந்தத்தால் பாரதம் தீட்டியவன் - நம்மைச்
சொந்தமாய் ஆக்கியே காட்டியவன்
சிந்தையில் அன்பினைப் பூட்டியவன் -
இன்பச் செந்தேனை அள்ளியே ஊட்டியவன்

காகமாய் மாறியே மாமுனி கைக்குடம்
கவிழ்த்தே காவிரிக் கண்டவனாம்
சோகமாய்ப் பூஜித்த ஔவையாரைத் தூக்கி
சொர்க்கத்தில் விட்டிட்ட நல்லவனாம்

பாராண்ட ஈசனின் தேராண்ட அச்சினைப்
பட்டென்று தூளாக்கிப் போட்டவனாம்
காடாண்ட ராமனும் யாழண்ட வேந்தனும்
கண்ணீரால் பூஜித்த வல்லவனாம்

தேனாண்டப் பூக்களும் வானாண்ட
மீன்களும் தேடி வணங்கிடும் பிள்ளையாராம்
மீனாண்ட ஊரிலும் சால்பாண்ட ஊரிலும்
மேவிடும் அன்னைக்கே மூலவராம்

கல்வியில் வல்லவர் ஆகிடலாம் - ஞானக்
கடலில் நீந்தியும் ஆடிடலாம்
பற்பலப் பாடல்கள் பாடிடலாம் - நம்ம
பாவத்தை போக்கிடும் பிள்ளையாராம்

நோய்களைப் போக்கிடும் வல்லவராம் -
நம்மை நூறாண்டு வாழ்ந்திடச் செய்பவராம்
தாய்தந்தை யாகியே காப்பவராம் - நம்மைத்
தாங்கி வளங்களைச் சேர்ப்பவராம்

நாரணப் பிள்ளையார் மீதினிலே -முழு
நம்பிக்கை வைத்திடும் போதினிலே
ஊரெல்லாம் போற்றிடும் வாழ்க்கை வரும்
நாமும் ஒங்கியே வாழ்ந்திட செல்வம் வரும்

துன்பங்கள் ஓடியே மாய்ந்துவிடும் -
நம்மை தொடர்ந்தே இன்பங்கள் சேர்ந்துவிடும்
வம்பு வழக்குகள் தூர்ந்துவிடும் - பகை
வாடியே வந்து வணங்கி விடும்.

# தொண்டு

முனைவர் அரங்க. இராமலிங்கம்
தமிழ்ப் பேராசிரியர்

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பது திருநாவுக்கரசரின் திருவாக்கு. தொண்டினையே தொழுகையாய்க் கொண்டு வாழ்பவர்களால் இவ்வுலகம் வாழ்கிறது. தொண்டு பல வகைப்படும். மனிதராகப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு வகையில் தம்மால் முடிந்த அளவு தொண்டு செய்தால் நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை விளையும். தொண்டு செய்வதால் மனம் பண்படும். திருநாவுக்கரசர் உழவாரப்படை கொண்டு திருக்கோயில் திருப்பணி செய்ததும், மகாத்மாகாந்தியடிகள் இராட்டினம் கொண்டு நூல் நூற்றதும் மனத்தைப் பக்குவப்படுத்த அவர்கள் மேற்கொண்ட தொண்டுகளாகும்.

மனித குலத்திற்குத் தொண்டு செய்ய வேண்டுமானால் எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் கருதுகிற மனநிலையினைப் பெறவேண்டும். ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் திருமூலரின் கருத்தினை முழுமையாக உணர்ந்தவர்களே தொண்டு செய்யத்தகுதி பெற்றவர்கள்.

ஒரு முறை விவேகானந்தர் தம் சீடரை நோக்கிப் பின்வருமாறு கூறினார். ''எவ்வளவோ தவத்திற்குப் பின் நான் இந்த ஓர் உண்மையை உணர்ந்தேன். கடவுள் ஒவ்வொரு உயிரினிடத்தும் உறைகின்றார். உயிர்கள் அனைத்தும் இறைவனின் பல்வேறு வடிவங்களே. மக்கட் சேவை செய்தவன் கடவுளுக்குச் சேவை செய்தவனாகிறான். நான் இன்று சொல்லியவற்றை உன் இதயத்திலே எழுதி வை! மறந்து விடாதே'' என்றார். மக்களுக்குச் செய்யும் தொண்டை மகேசனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதியவர் விவேகானந்தர். மக்களுக்குத் தொண்டு செய்யக் கருதுபவர் முதலில் தமக்குள்ளே இருக்கும் பேதத்தை வேறுபாட்டை வேரறுக்க வேண்டும். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உயர்ந்த மனப்பண்பாட்டைப் பெறுதல் வேண்டும்.

''காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும், மலையும் எங்கள் கூட்டம்'' என அனைத்து உயிரினங்களையும் தம் சுற்றமாகக் கருதியவர் மகாகவி பாரதியார். வேதத்தின் கடைசிக் கருத்தாகக் கவிஞர் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. ''கவனி! அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழும் அனந்தகோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கிறது. இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து. தன்னிடத்தில் உலகத்தையும், உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன் என்பது முன்னோர் கொள்கை'' என்கிறார் மகாகவி. உயிர்களிடத்து வேறுபாடு காணாத மனநிலை பெற்றவரே தொண்டு செய்வதற்கு முழுத் தகுதி படைத்தவராவர். அவ்வாறு செய்யப்பெறும் தொண்டுகளும் பயன் நோக்கிச் செய்யப்படுவன அல்ல. கைம்மாறு வேண்டாத மழை போலவும், ஊரின்கண் அமைந்துள்ள உண்ணுநீர்க் குளம் போலவும், பழுத்த கனிகளைத் தாங்கி ஊரின் நடுவே நிற்கும் பயன்மரம் போலவும் தொண்டு அமைதல் வேண்டும்.

தொண்டு செய்யாத வாழ்க்கை குறையுடைய வாழ்க்கையாக - முழுமை பெறாத வாழ்க்கையாக அமையும். தமக்கென முயலாது பிறர்க்கென முயன்று தொண்டு செய்பவர் இருப்பதனாலேயே இவ்வுலகம் இன்றுவரை சிறப்புடன் வாழ்கிறது என்கிறது புறநானூறு. (182) தொண்டு செய்வதற்கு, எல்லா உயிரையும் தம்முயிர் போல் எண்ணுவதற்குரிய மனப்பக்குவத்தைத் தமக்கு அருளுமாறு இறைவனிடம் வேண்டுகிறார் தாயுமானவர்.

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி
யிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்
பராபரமே''

இவ்வாறு இறைவனிடம் வேண்டி தொண்டு செய்வதற்கேற்ற மனப்பக்குவத்தைப் பெற்ற தாயுமானவர் மக்களுக்குத் தொண்டு செய்யத் தன்னை ஆளாக்கி விடும்படி அடுத்து வேண்டுகிறார்.

''அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி
விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும்
பராபரமே''

இன்பத்தைத் தேடியலைவோர் இன்பத்தை நாடிப் பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டா. இன்பத்தைத் தேடியலைவோரை நாடி இன்பமே தேடி வந்து அடைக்கலமாகும் வழியைத் தாயுமானவர் எடுத்துரைக்கிறார். அன்பர் பணியாகிய மக்கள் தொண்டினைச் செய்யச் செய்ய இன்ப நிலை தானாக ஒருவர் உள்ளத்தில் வந்தமையும் வழியினை மிக நுட்பமாகத் தாயுமானவர் புலப்படுத்துகின்றார்.

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி'' *(226)*

என்னும் குறளில் வறியவரின் பசிப்பிணியினைப் போக்கச் செலவிடப்படும் பொருள் செலவிடுவான் தனக்கே பின்னாளில் வந்து உதவும் எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்.

பசிப்பிணி போக்கும் தொண்டு, தொண்டு செய்தவனுக்குப் பிற்காலத்தில் உதவும் கருவூலமாகப் பயன்படுவது போல, மக்களுக்குச் செய்யும் தொண்டினால் இன்பநிலை தானாகவே மனத்தில் வந்து அமையும் எனும் நுட்பத்தைத் திருவள்ளுவரும், தாயுமானவரும் மிக நுணுக்கமாகக் குறிப்பிட்டுள்ளனர். தொண்டு செய்தால் இன்பநிலை பெறலாம். இவ்வாறு தொண்டு செய்து இன்பநிலை பெற்ற மனம் எதை விரும்பும்? பொன்னை விரும்புமா? புகழை விரும்புமா? பொருளை விரும்புமா? தொண்டு செய்து பண்பட்ட மனம் இவற்றையெல்லாம் விரும்பாது! பின் எதை விரும்பும்?



''எல்லாரும் இன்புற்று இருக்க
நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றும் அறியேன்
பராபரமே''

என விரும்பி வேண்டும் எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் மனத்தைப் பெறத் தொண்டு செய்வோம். தொண்டு செய்வதன் வழி பிறருக்கும் இன்பம் நல்குவோம், நாமும் இன்பநிலை எய்துவோம்.

''எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்ததாலோ''

என்கிறார் வடலூர் வள்ளற்பிரானாகிய இராமலிங்க அடிகள். பயன் நோக்காது பணிசெய்யும் அன்பு உள்ளத்தினைப் பெறுவோம். தூய்மையான அன்புள்ளம் கொண்டவர்கள் செய்யும் தொண்டை இறைவனும் விரும்புகிறான்.


**திருக்கோயில்
திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.



''வேயின் எழுங்கனல் போலே
இம்மெய்யெனுங்
கோயிலிருந்து குடிகொண்ட கோள்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித்தயா என்னும்
தோய மதாய் எழுஞ் சூரியனாமே''

தென்னாட்டிற்கு அனுப்புகிறான்.

புறத்தே தீயை வளர்ப்பது புலத்தியம் இது அந்தணர்களின் கோட்பாடு. ஆகவனியம், கிநாகுபத்தியம், தட்சிணாக்னி என்ற மூன்று வகைத் தீயை வாழ்நாள் முழுவதும் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு.

''அந்தணராவோர் அறுதொழில்
பூண்டுளோர்
செந்தழல் ஓம்பி முப்போதும றியாமற்
செய்து''

என்கிறார் திருமூலர் (திருமந்திரம் 224)

திருஞான சம்பந்தப் பெருமான் தில்லை செல்கிறார். திருக்கோபுரத்தைத் தரிசித்து, பேரம்பலத்தை வணங்கி, நடராசப் பெருமாள் திருமுன் செல்கிறார். தனது உள்ளத்தில் நிரம்பியிருந்த ஞானத்தின் காட்சியை நேராகக் கண்டு உருகுகிறார். அப்போது அவர் கருத்தில் தில்லை வாழ் அந்தணர்கள் ஆற்றிவரும் பெரும் பணியே முன்நிற்கிறது. நடராசப் பெருமானைத் தொட்டு வழிபடும் பேற்றினைப் பெற்றறவர்கள்

# திருமந்திர உபதேசம்

டி.வி.வெங்கட்ராமன்,இ.ஆ.ப.,(ஓய்வு)

(திருமந்திரம் 116)

காய்ந்த மூங்கிலில் தீ வெளிப்பட்டுப் பரவுகிறது. பக்குவமடைந்த உயிரில் உயிருக்கு உயிராக இறைவன் ஜோதியாகக் கலந்திருக்கின்றான். எல்லா உயிர்களிலும் இறைவன் குடிகொண்டிருக்கின்றான். ஆனால் பக்குவமடையாத உயிர்கள், மலம் நீங்காத உயிர்கள், தம்முன் இருக்கும் இறைவனைத் தெரிந்து கொள்ளவில்லை. திருவருள் துணையோடு, தன்னையும் தலைவனையும் தெரிந்து கொள்ளும் நாட்டம் வளர்ந்து வரும் நிலையில், உயிர்கள் அகமுகமாக இறைவனைத் தேடுகின்றன. இடையில் நிற்பது அறியாமை. அதற்கு மூல காரணம் ஆணவமலம்.

அகத்தே இருக்கும் தீ அகத்தியம். இறைவன் அகத்தே அறிவுத் தீயை மூட்டுகிறான். ஆணவத்தின் வலிமையை மாற்றுவதற்காக அதைக்கண்டு வளர்க்க வேண்டியது உயிரின் கடமையாகும். அகத்தியன் இத்தீயை வளர்த்தவன். ''அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்'' என்றார் திருமூலர் (திருமந்திரம்336). இறைவனுக்கு அது ஏற்புடையது. அதனால்தான் தனது திருக்கல்யாணத்தின் போது தெற்கு உயர்ந்து, வடக்கு சாயும் போது, அகத்தியனை ''நகுபுள அங்கி அகத்திய'' என்று அழைத்து உலகை சமன் செய்ய

அல்லவா அவர்கள்.

''கற்றாங் கெளியோம்பிக் கலியை
வாராமே
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம்''
என்றுதொடங்கும் பதிகத்தைப் பாடுகிறார்.

எரி, அதாவது தீயை வளர்த்தல் என்பது ஒன்று. ஓம்புதல் என்பது மற்றொன்று. முன்னது அறச்செயல். பின்னது அகச் செயல். திருமூலரும் ஓம்புதல் என்றே சொன்னார். ஓம்புதல் என்கிற நிலையில் புறத்தி அகத்தியாகவும் பரிணமிக்கின்றது. பல பிறவிகளில் ஆன்மா, தனது அனுபவங்கள் வழியாக அடையும் முதிர்வு. ஆன்மாவிற்கு ஒரு ஒளியைக் கொடுக்கின்றது. அதை ஆன்ம ஒளி என்பார்கள். அதைச் ''சுடர்'' என்கிறார் திருமூலர். இந்த சுடர் ஒளிவிட்டு நிற்க ஆன்மா இந்த சிற்றொளி மூலமாகப் பேரொளியைக்கண்டு கொள்கிறது.

ஆன்மா அறிவு வடிவமானது. இறைவனும் அறிவுப் பொருளே. பேரறிவானவன். அறிவு வடிவான ஆன்மா இயல்பாகவே பேரறிவுப் பொருளுடன் தான் சேரும். சிற்றொளி பேரொளியில் அடங்குவதும் இயல்பே.

''சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம்
வேறுண்டோ

சுத்தவெளியில் சுடரில் சுடர் சேரும்''

என்றார் திருமூலர் (திருமந்திரம்135)

கோயிற்திருப்பதிகம் ஒரு அற்புதமான பாட்டு. மாணிக்கவாசப் பெருமானால் அருளிச் செய்யப்பட்டது.



''இறைவா, தங்களுடைய இயல்பான நிலையை மறைத்துக் கொண்டு, வஞ்சகம் செய்து புலன்கள் என்னை ஏமாற்றி வந்தன. அறியாமையை வளர்த்தன. வாழ்க்கைச் சூழலில் தள்ளின. அவற்றின் ஆற்றலை மாற்றி அமைக்கும் திறன் இல்லாதவனாக நான் மயங்கிக் கிடந்தேன். அப்போது திருவருள்துணையாக என்றும் இருக்கும் சோதிப் பொருள் நீஎன்று தெரிந்தது. நீஒரு வளர்ந்து வரும் சோதி என்பதையும் அறிந்து கொண்டேன். உன்னை சோதியாகக் காண வேண்டுமே! அதற்கு நீஅருள் செய்ய வேண்டும்'' என்று இந்தப் பாட்டில் மணிவாசகப் பெருமான் உள்ளத்தைத் திறந்து பேசுகிறார்.

''மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே''

''ஊறி நின்றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காண வந்தருளாய்''

''உருவம் நினைப்பவர்க்கு உள்ளூறும் சோதி'' என்பார் திருமூலர் (திருமந்திரம் 2842). உருவம் என்பது இங்கே ஞான குருவின் உருவத்தை பேசுகிறது. ஞான குருவின் உருவத்தை உள்ளே வைத்து சிந்திக்கும் போது அங்கே சிவசோதி விளங்கும் என்பதைத் தெளிவாக்குகிறார். ''அத்தகைய சோதியை நான் கண்டேன் என்கிறார் திருமூலர். அந்த ஒளி என் உள்ளத்திலே தோன்றியவுடன் நான் அதனை ச்சிக்கெனப் பிடித்தேன் என்கிறார். அப்போது அது என்னுள் அடங்கிற்று. அவ்வாறு அடங்கிய நிலையில் நான் அதில் கலந்து தோய்ந்தேன். என் அறிவு அதனுள்ளே அடங்கிற்று. நான் கண்ட பேரறிவு வெறுமானே நிற்கவில்லை அது எல்லையின்று பிரியத் தொடங்கிற்று அதனுடைய வியாபகத்துள் என் அறிவும் எல்லாமும் அடங்கின'' என்கிறார் திருமூலர்.

'' என்னை நான் என்பது அறியேன்
பகல் இரவாவதும் அறியேன்''

இது மணிவாசகப் பெருந்தகையின் திருவாக்கு

''பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றாப்
பரஞ்சோதி என்னும் படிந்ததற் பிள்ளை
பரஞ்சோதியுள் நான் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக் கண்டேனே''
(திருமந்திரம் 2842)

பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளது சிவசோதி. கதிரவன் திங்கள், விண்மீன்கள், ஐம்பூதங்களில் ஒன்றாகிய தீ இவையாவையுமே சிவசோதியின் வெளிப்பாடுகள். பரம்பொருளுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் ஒரு பணி நடைபெறுமேயானால் பரம்பொருள் தனது மகிழ்ச்சியை எந்த வகையிலும் வெளிப்படுத்திக் கொள்ளும்.

திருநீல்நக்கநாயானார் என்ற அருளாளர் திருச்சாத்தமங்கையைச் சேர்ந்தவர். திருஞான சம்பந்தருடன் சம காலத்தவர். ஆளுடைப் பிள்ளையாரிடம் அளவு கடந்த அன்பு கொண்டவர். ஒரு சமயம் திருஞானசம்பந்தர் திருச்சாத்தமங்கைக்கு விஜயம் செய்கிறார். அவருடன் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவருடைய மனைவியாகிய மதங்க சூளாமணி அம்மையாரும் வருகின்றனர். திருநீலநக்கர் அவர்களைப் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்று தனது இல்லத்தில் வைத்துக் கொள்கிறார். இரவு உணவு அருந்திய பின் ஞானசம்பந்தர் பெருமான் திருநீலகண்டயாழ்ப்பாணருக்குப் படுக்க இடம் வேண்டும்'' என்று கேட்கிறார். திருநீல நக்கர் ஒரு அந்தணர். யாழ்ப்பாணர் பிற வகுப்பைச் சார்ந்தவர். ஆனால் அதைக் கருதாது. வீட்டின் நடுவில் யாகம் செய்யும் இடத்திற்கு அருகில் இடம் தந்து உபசரித்தார். இதை அவர் மகிழ்ச்சியுடன் முழுமனதுடன் செய்தார். இறைவனுக்கும் அந்த மகிழ்ச்சியில் ப்ங்கு உண்டு. அதை அவன் எப்படி வெளிப்படுத்துகிறான்?

அங்கே யாக குண்டத்தில் எரிந்து கொண்டிருந்த தீ மகிழ்ச்சியுடன் முன்பு இருந்ததை விட ஒரு மடங்கு ஓங்கி, பிரகாசித்து ஒளிவீசி தன்னைத் தானே வலம் வந்தது. என்ன அதிசயம்! திருநீலநக்கருடைய. பேதமில்லாத தெய்வீகப் பண்பினைக் கண்டு சிவபெருமான் அகமகிழ்ந்தான். தனது மகிழ்ச்சியை யாகத்தீயை ஓங்கச்செய்து வெளிப்படுத்தினான்.

''வேயின் எழுங்கனல் போலே''

இறைவன் உயிருக்கு உயிராக இருக்கிறான் என்பது மட்டும் அல்ல. தோன்றாத்துணையாக இருந்து கொண்டு உயிருக்கு படிப்படியாக வளர்ச்சியைக் கொடுக்கின்றான். மாக்களைக் கருவியாக வைத்துக் கொண்டு தக்க தருணத்தில் தன்னை வெளிப்படுத்தவும் செய்கிறான். உயிருக்கல்லவா லாபம்!

(தொடரும்)



# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - அகத்தியர்

"செந்தமிழ் வாரிதி" முனைவர் இரா. செல்வக்கணபதி

**ஒருவரா ? பலரா?**

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் பெரிதும் சிறப்புப் பெற்றவர் அகத்தியர். இதிகாசங்கள், பதினெண் புராணங்கள், தலபுராணங்கள் மற்றும் சமய நூல்களில் அகத்தியர் பற்றிய குறிப்புக்கள் ஏராளம் காணப்படுகின்றன. இவரை குறுமுனி என்றும் நூல்கள் குறிக்கின்றன. அகத்தியர் என்பவர் பாரத நாட்டுக் காப்பியங்கள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளார். இவர் ஒருவரா அல்லது அகத்தியர் என்ற பெயரில் பல காலத்தில் பலர் வாழ்ந்திருந்தனரா என்பதை உறுதி செய்ய இயலவில்லை. அகத்தியர் என்ற பெயரில் பலர் வாழ்ந்திருத்தல் கூடும் என்று கருத வாய்ப்புக்கள் உள்ளன.

**வேதத்தில் அகத்தியர்**

நூல் வேதங்களுள் முதன்மையானதும், காலப் பழமை உடையதுமாகிய இருக்கு வேதத்தில் இடம் பெறும் சில பாடல்களையுப் பாடியவராக அகத்தியர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இவர் மனைவி லோபாமுத்திரை. இவ்வம்மையார் பாடிய் பாடல்களும் இருக்குவேதத்தில் இடம் பெற்றுள்ளன.

தைத்ரிய ஆரணியகம் ''அகத்திய நட்சத்திரம்'' என்ற ஒன்றைக் குறிக்கிறது. சுவர்க்கத்தை அடையும் சான்றோரின் ஒளிப்பிழம்புகளே நட்சத்திரங்கள் என்று தைத்ரிய சங்கிதை என்ற நூலும், சதபத பிரமாணமும் தெரிவிக்கின்றன.

**தமிழில் அகத்தியர்**

தமிழ் தொண்நூல்களாகிய எட்டுத் தொகை மற்றும் பத்துப்பாட்டுக்களில் அகத்தியர் இடம் பெறவில்லை. 'பொதியின் முனிவன்' என ஒரு நட்சத்திரம் மட்டும் பரிபாடலில் குறிக்கப் பட்டுள்ளது. பொதிய மலை பற்றிக் குறிப்பிடும் குறுந்தொகை அகநானூறு, புறநானூறு முதலிய நூல்கள் அகத்தியரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. எனின், வான்மீகி இராமயணத்தில் பஞ்சவடிக்கு இரண்டு யோசனை தூரத்திலும், அயோமுகத்தின் சிகரத்திலும் அகத்தியர் ஆசிரமங்கள் இருந்தன என்ற குறிப்புக்கள் காணப் படுகின்றன. சிலப்பதிகாரத்தில் சில குறிப்புக்கள் காணப்படினும் அகத்தியர் என்ற பெயர் இடம் பெறவில்லை. முதன் முதலாக மணிமேகலையில்தான் அகத்தியர் உற்பத்தி வரலாறு பதிவாகியுள்ளது.

**மணிமேகலை :**

காந்தன் என்பவன் பரசுராமன் மழுவுக்குப் பயந்து நீங்கிய போது, அகத்தியர் மொழி கேட்டுப் பின்பு தான் மீள்வதாகக் கூறியது. இந்திரகுமாரனை அவர் சபித்தது. காந்தன் எனும் சோழன் வேண்ட அகத்தியர் தம் கரகத்தைக் கவிழ்க்கக் காவிரி தோன்றியது. தொடித்தோட் செம்பியன் மலையத்தகுந்தவன் (அகத்தியன்) வரை கேட்டு தூங்கெயில் எறிந்தது முதலியன மணிமேகலையில் காணப்படுகின்றன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின் வந்த தேவரா ஆசிரியர்களின் பாடல்களில் அகத்தியர் குறிக்கப்படுகிறார். திருமூல நாயனாராகப் பின் வெளிப் போந்த இமயமலைச் சிவயோகி அகத்தியரைக் காணவே தென்னாடு வந்தார் என்று சேக்கிழார் குறிக்கிறார்.

பக்தி இலக்கியங்களில் அகத்தியர் தமிழோடும், தமிழின் தோற்றத்தோடும் தொடர்பு படுத்திப் பேசப்பட்டுள்ளார். இவரைப் பாண்டிய வேந்தர்கள் குலகுருவாகவும், தமிழ் கற்பிக்கும் ஆசிரியராகவும் கொண்டிருந்தனர் என மெய்க் கீர்த்திகளும், செப்பேடுகளும் குறிக்கின்றன.

**பாண்டியத் தொடர்பு :**

இறையனார் களவியல் உரையில் முதற் சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் அகத்தியர் தலைமை ஏற்றுத் தமிழ் ஆராய்ந்தார் என்ற குறிப்புக் காணப்படுகிறது. இவர் அகத்தியம்என்ற தமிழ் தொல் இலக்கண நூல் ஒன்றை இயற்றினார் என்றும் அவ்வுரை மேலும் குறிப்பிடுகிறது. அகத்தியம் இன்று கிடைத்திலது. சில நூற்பாக்கள் மட்டும் இலக்கண உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப் பட்டுள்ளன.

பாண்டியர் தொடர்பால் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் அகத்தியர் பெயர் பரவியது.

**கம்பர் :**

கம்பர் தம் இராமகாதையில்

அகத்தியரைத் தமிழ்முனி எனக் குறித்தார். ஆரண்ய காண்டத்தில் கம்பர் அகத்தியப்படலம் என்ற ஒன்றையும் அமைத்துள்ளார்.

**அகத்தியர் கலை உண்டது.**

**வாதாள என்பாளன் வதைத்தது.**

**விந்த மலையை அடக்கியது.**

**சிவன் ஆணை கேட்டுத் தென்திசை போந்தது.**

**குண்டிகையில் காவிரி கொணர்ந்தது.**

என்ற செய்திகள் கம்பரின் படைப்பில் காணப்படுகின்றன. பொதிகை மலையில் அகத்தியர் தமிழ்ச் சங்கம் என்ற ஒன்றை நிறுவி நடத்தியதாகவும் கம்பர் குறித்துள்ளார்.

**இலக்கணங்களில் ...**

பன்னிரு படலம் என்ற இலக்கண நூலின் பாயிரப்பகுதி, தொல்காப்பியரை அகத்தியரின் மாணவர் என்று குறித்துள்ளது.

புறப்பொருள் வெண்பா **மலைப்பாயிரம்,** அகத்தியர் தலை மாணாக்கர் பன்னிருவர் என்று உரைக்கிறது. பன்னிரு படலம் அகத்தியர் மாணாக்கர்களால் இயற்றப்பட்டன என்ற கூற்றைத் தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணரும், பேராசிரியரும் ஏற்க மறுக்கின்றனர்.

யாப்பருங்கலவிருத்தி **'ஆனந்த வோத்து'** என்ற நூல் செய்தார் அகத்தியர் என்கிறது. இக்கருத்தைப் பேராசிரியரும், நச்சிணார்க் கினியரும் மறுத்துள்ளனர்.

தலபுராணம் :

மதுரை தலவரலாறு கூறும் நூல்களுள் ஒன்று பெரும்பற்றப்புலியூர் நம்பி பாடிய திருவிளையாடல் புராணம். சிவன் குறுமுனியாகிய அகத்தியருக்குத் தமிழ் உரைத்த திருவிளையாடல் இந்நூலுள் இடம் பெற்றுள்ளது.

கச்சியப்ப சிவாசாரியார், கந்தபுராணம் அகர காண்டத்தில் அகத்தியர் தொடர்பான புராண வரலாறுகள் சிலவற்றை உரைத்துள்ளார். காஞ்சிப் புராணம் பாடிய சிவஞான சுவாமிகள் கந்தபுராணம் கூறும் அகத்தியர் வரலாற்றுச் செய்திகளை வழிமொழிந்து போற்றியுள்ளார்.

தமிழில் அகத்தியர் பெயரில் மருத்துவம், இரசவாதம், மந்திரம், யோகம், ஞானம் குறித்தெழுந்த பல நூல்கள் காணப்படுகின்றன. இவரை ஒரு சித்தர் எனக் கருத இந்நூல்களே காரணமாய் நிற்கின்றன.

**பெரியபுராணம் :**

சேக்கிழாரைத் தழுவி எழுந்த அகத்தியர் பக்த விலாசம் என்ற ஒரு நூல் வடமொழியில் நிலவுகிறது.

அகத்தியர் தொகுத்த திருமுறைப் பாடல் தொகுதி ஒன்றை அகத்தியர் தேவாரத்திரட்டு என்று கூறுகின்றனர்.

அகத்தியர் ஆறு எழுத்து அந்தாதி என்ற நூல் ஒன்றும் தமிழில் உள்ளது.

**அகத்தியத் தலங்கள் :**

நாசிக் நகருக்கு 24 மைல் தொலைவில் திரு அகத்தியாச்சிரமம் என்ற புண்ணியத்தலம் ஒன்று உள்ளது. பஞ்சவடிக்கு அருகிலுள்ள இத்தலம் சத்யபுரி என்று இன்று வழங்கப்படுகிறது.

திருஅகத்தியான்பள்ளி என்ற சிவத்தலம் ஒன்று திருமறைக்காட்டுக்கு அருகில் உள்ளது.

இத்தலத்தில் தவம் செய்து அகத்தியர் மும்மூர்த்திகளையும் தமக்கு மகவாகப் பெற்றார்.

யமதருமன் இத்தலத்தில் **சிவன் முத்திப்** பெற்றான்.

இத்தலத்துச் சிவனுக்கு அகத்தீச்சரர் என்பது திருநாமம்.

இங்கே அகத்தியருக்குத் தனி சந்நிதி உள்ளது. அகத்திய தீர்த்தம் ஒன்றும் இங்கே உண்டு. இத்தலத்தைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

கன்யாகுமரியிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள தலம் ஒன்று திரு அகத்தீச்சரம் என்று வழங்கப்படுகிறது.

இது தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று தமிழ்நாட்டுச் சிவாலயங்களில் அகத்தியருக்குத் திருமேனிகள் காணப்படுகிறது.

அகத்தியர் பெயரால் நாடி ஜோதிடமும் நிலவி வருகிறது.

பலதலபுராணங்களில் அகத்தியர் பற்றிய குறிப்புகள் விரிவாகக் காணப்படுகின்றன.

சித்தர் மரபுகளில் அகத்தியர் மரபு தொன்மையானது.

சித்தர் அகத்தியர் இவருள் எவர் என்று தீர்மானிக்க இயலவில்லை. எனினும் அகத்தியர் பாடல்கள் கொண்டு அவரை இனங்காண முடியும்.

அகத்தியர் பாடல்களுக்குள் பின்னர் நுழைந்து சித்தர் நெறியில் அவர் ஆற்றிய பதித்த தடங்களைத் தேடிக் காண்போம்....

(தொடரும்)

# திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி

## மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

நான்மாடக் கூடல் என வழங்கும் மதுரைப் பதியிலே ''தனபதி'' என்ற பெயர் கொண்ட வணிகன் ஒருவன் குபேரனைப் போன்று பெருஞ்செல்வ வளமையுடன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி சுசீலை, திருமகளைப் போன்ற அழகும் மாசற்ற கற்புநெறியும் கொண்டவள். அவ்விருவருக்கும் திருமணமாகியும் மகப்பேறு வாய்க்கவில்லை.

அதனால் தனபதி, தனது தங்கையின் மகனையே தனது வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொண்டான். ஆயினும், தன் தங்கை தான் பெற்ற பிள்ளையையே தந்துதவிய நன்றியைச் சிறிதும் பாராட்டாத தனபதி தன் மனைவியின் சொல்லைக் கேட்டு, தங்கையுடன் தீராத சண்டையிட்டு வந்தான்.



ஒரு நாள் சண்டையில், அவனது தங்கைக்குக் கோபம் மீறவே அவள் அவனை நோக்கி ''உனக்கு ஏன் இத்தனை ஆணவம்? நீதான் பிள்ளைப் பேறு அற்ற பெரும்பாவி ஆயிற்றே! என் அருமைப் பிள்ளையினால் அல்லவோ நீஇம்மை, மறுமைப் பயன்களையும் அடைகிறாய்'' என்றாள்.

அவளது ஏளனச் சொற்களைக் கேட்ட தனபதி மகப்பேறு பெறுவதற்குரிய வரத்தைப் பெறுவதற்காக முடிவு செய்தான். தன்னிடம் இருந்த பெருஞ்செல்வத்தை எல்லாம் மருமகனுக்கே உரிமையாக்கிவிட்டுத் தன் அன்பு மனைவியோடு தவம் செய்யக் கானகம் சென்று விட்டான்.

தவத்தைச் செய்வதற்காக மனைவியுடன் காட்டுக்குச் சென்ற தனபதி வீடு திரும்ப நீண்ட காலமாகிவிட்டது. அதற்குள் அவனது மருமகனுக்குக் கொடுத்த செல்வங்களை அதற்கு உரிமையுள்ள பங்காளிகள் கூடி வழக்குப் பேசிக் கவர்ந்து கொண்டார்கள். பயிர் விளையும் நிலங்கள், அணிகலன்கள், அடிமைகள், பொருள்கள், பசுக்கள், மேழிச்செல்வம் ஆகிய அனைத்தையும் அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

இதனால் தனபதியின் தங்கை திருக்கோயிலுக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளிடம் கூறி முறையிட்டாள். நிலத்தின மீது விழுந்து கதறி அழுதாள். மயங்கி விழுந்தாள். உறங்கி விட்டாள். உறங்கிய அவள் கனவு கண்டாள்.

அந்தக் கனவிலே சோமசுந்தரக் கடவுள், வேதியர் வடிவில் தோன்றி, பெண்ணே! பொழுது விடிந்தபிறகு உன் பங்காளிகளை தருமசபைக்கு நீஅழைத்து வருவாயாக! நாம் அங்கு உள்ள அறிவிற் சிறந்த பெரியோர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அந்த வழக்கைத் தீர்த்து வைத்து உன் பொருளை மீட்டுத்தருகிறோம் என்று அருளிச் செய்தார்.

மறுநாள் விடியற்காலையில் கண் விழித்த தனபதியின் தங்கை, கனவில் கூறியபடி பங்காளிகளின் இருப்பிடம் சென்று பலரும் கேட்க, 'அறநெறியின் சரியான தீர்ப்பினின்று தப்பிவிடவும், பொய்வழக்கினால் வென்று விடவும் உங்களை நான் விட மாட்டேன். அனைவரும் சாட்சி கூற தருமசபைக்கு வந்து பெரியோர்களின் தீர்ப்பினைக் கேட்டு அதற்குச்

செவி சாய்த்து அதன்படி நடந்து கொள்ளுங்கள் எனக் கூறினாள்.

அதைக் கேட்ட பங்காளிகள் அவள் மீது பழிச்சொல் கூறி, நிலத்தில் தள்ளி அடித்தார்கள். அவள் தன் மகனையும் அழைத்துக் கொண்டு ''இது முறையோ'' என்று அழுதபடி தருமசபை சென்று நடந்தவற்றைக் கூறினாள்.

அதைக் கேட்ட நீதிநூல் வல்லவர்கள், ஏவலாளர்களை அனுப்பி வைத்து, தருமசபைக்குப் பங்காளிகளை அழைத்து வரச் செய்தனர். அதற்குள் சோமசுந்தரக் கடவுளே தனபதி போலத் திருவுருவம் தாங்கி அங்கு எழுந்தருளியிருந்தார். அவர் தருமசபையில் நுழையும் போதே ''இங்கு அரசர் இல்லையோ? அறிவிற் சிறந்த ஆன்றோர்களும் இல்லையோ? அரசனின் செங்கோல் தவறிக் கெட்டுக் கொடுங்கோல் ஆயிற்றோ? தருமம் எங்கே யாவது சென்று ஒளிந்து மறைந்ததோ!'' என்று முறையிட்டவாறே தருமசபையை அடைந்தார்.

மாமன் தனபதி வடிவில் வந்த சிவபெருமான் தன் மருமகனையும் தங்கையையும் தழுவிக் கொண்டு, ''நீங்கள் வறுமையினால் துன்பப்படுகிறீர்களே'' என்று புலம்பிவிட்டு, தன் மருமகனுக்கு அணிவித்த நகைகளைக் கவர்ந்து சென்றவர்கள் யார் என்று கேட்டார்.

பிறகு தங்கையையும் அவள் புதல்வனையும் கண்ணீரைத் துடைத்து முதுகைத் தடவி, ''வருந்தாதீர்கள் ; நான் வருவேன் என்று சிறிதும் எதிர்பாராத வஞ்சகப் பங்காளிகளின் வழக்கு தோற்று விடும்'' என்று கூறி, பங்காளிகளை நோக்கி ''நண்பர்களிடம் வஞ்சனை புரிந்தும், நம்பியவர்களின் பொருள்களைக் கைப்பற்றியும், இரப்பவர்களுக்குச் சிறிதளவும் கொடுக்காமல் கருமித்தனம் செய்தும், வரம்பின்றி வட்டி வாங்கியும் சிலர் செல்வம் தேடியதைப் போலத் தேடப்பட்டதல்லவே என் செல்வம். அறவழியில் தேடப்பட்ட நம்பொருள் எப்படி அழியும்?'' என்றார்.

பிறகு திருக்கோயிலை நோக்கி, சோமசுந்தரக் கடவுளை எண்ணி ''மாணிக்கம் விற்றருளிய எமது வணிகர் குலத்தவரே ! எங்கள் வழக்கை, இந்த அறமன்றத்தின் மூலம் தீர்த்து எமது பொருளை மீட்டுத் தருக'' என்று புலம்பி முறையிட்டார். பிறகு நீதிமன்றத்தாரை நோக்கி ''அரசனது செங்கோல் நிலவும் அறநெறி மிகுந்த இந்நாட்டில் உங்கள் நடுநிலை தவறாத நா என்னும் துலாக்கோலைக் கொண்டு, எமது வழக்கையும், எம்பங்காளிகளின் வழக்கையும் சீர்தூக்கிப் பார்த்து நீதியை வழங்குங்கள்'' என்றார்.

நீதிமன்றத்தினர், இருதரத்தாரின் வழக்கையும் ஏற்று ஆராய்ந்து, உண்மை தெரிந்து ''பங்காளிகளின் வழக்கு பொய் வழக்கு'' என்ற முடிவெடுத்துக் கூறினர்.

பங்காளிகள் ''இவர் தனபதி செட்டியார் அல்ல'' என்றனர். அப்போது இறைவராகிய தனபதி செட்டியார் தம் இருகைகளையும் கொட்டிச் சிரித்து அவரவர் குடிப்பெயர், பட்டம், தனபதி தந்தை தாய், மாமன், பங்காளிகள், அவர்களைப் பெற்றவர், பிள்ளைகள், உடன் பிறந்தோர், மனைவியர், சுற்றத்தார் ஆகிய அத்தனை பேர்களின் பெயர்களையும், அவர்களின் குணங்களையும், செய்தொழில்களையும் ஒன்று விடாமல் முறைப்படி சிறிதும் மாறாதவண்ணம் கூறியருளினார்.

அதைக் கேட்ட பெரியோர்கள் ''இவர் அந்த தனபதி செட்டியாரே என்பதில் இன்னும் என்ன சந்தேகம்'' என்றனர். பங்காளிகள் ''நம் வழக்கு தோற்று விட்டது, இதனை அறிந்தால் பாண்டியன் நம்மைத் தண்டிப்பான்'' என்று மாயமாய் மறைந்தார்கள்.


அந்தப் பங்காளிகள் போனவுடன் ''தனபதி செட்டியார் முன்பு கொடுத்த பொருள்கள் அனைத்தும் அவரது தத்துப் புத்திரனுக்கே உரியன!'' என்று தீர்ப்புக் கூறப்பட்டது. அந்தச் சாசனத்தை எழுதி வாங்கித் தனபதியின் தங்கையிடம் கொடுத்தவுடனே சோமசுந்தரக் கடவுள் பலரும் காண மறைந்தருளினார்.

இச்செய்தியை அறிந்த மன்னன் சுந்தரேசபாதசேகர பாண்டியன், தனபதியின் உருவில் வந்து வாதாடி வென்றவர் சோமசுந்தரக்கடவுள்தான் என்பதை அறிந்து மகிழ்ந்தான். பின்பு அந்த வணிகச் சிறுவனுக்குப் பரிசுகள் பலவும் வழங்கி திருக்கோயிலையும் புதுப்பித்தான். பிறகு சில ஆண்டு கழிந்த பின் தன் மகன் வரகுணபாண்டியனுக்கு முடி சூட்டிவிட்டு, சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தான்.


## ஆன்மீக வெளியீடுகள்

**மகான் இராமானுஜர் சமத்துவ சமநீதி சிற்பி**
ஆசிரியர் திரு வை.ர. கோபால்
அரங்கர் இல்லம் - எண் 7, முதல் தெரு,
ஆர்டிலரி சாலை, அல்சூர்,
பெங்களூர் - 560008

**''முருக மந்திரங்கள் திருவாறெழுத்து''**
ஆசிரியர் முனைவர் ந.இராமலிங்கம், எம்.ஏ.,பி.எச்டி.,



தொடர்பு முகவரி
மலரகம்
5/120 பிள்ளையார் கோயில் தெரு
மஞ்சக்கொல்லை அஞ்சல்
நாகப்பட்டிணம் மாவட்டம்.

# பதில்





கேள்வி : பரார்த்த லிங்கங்கள் என்பவை யாவை?

பதில் : 1. மனிதர்களால் நிறுவப்பட்ட மானிட லிங்கம்

2. ரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்ட ஆரிட லிங்கம்.

3. விஷ்ணு போன்றவர்களால் நிறுவப்பட்ட தைவிக லிங்கம்

4. விநாயகரால் நிறுவப்பட்ட காண லிங்கம்.

5. தாமே தோன்றியவை சுயம்பு லிங்கம்

போன்ற 5 லிங்கங்களுக்கு பரார்த்த லிங்கங்கள் என்றுபெயர்.

கேள்வி : கற்பூரத்தின் தத்துவம் என்ன?

பதில் : கற்பூரம் எரியும் போது கரியோ, சாம்பலோ இல்லாமல் காற்றில் மறைந்து விடுகிறது. அது போல ஆன்மா இறைவனுடைய அருட்சோதியில் கரைந்து ஒன்று பட வேண்டும் என்ற தத்துவத்தை விளக்குகிறது.

கேள்வி : சிவபராக்கிரமம் என்பது என்ன?

பதில் : சிவபெருமானின் 64 திருவுருவங்கள் உருவானதை விவரித்துக் கூறும் நூல் சிவபராக்கிரமம் ஆகும்.

கேள்வி : பின்வருவனவற்றுள் எது சரி? எது தவறு?

1. வினாயகர், விநாயகர்

2. செந்தில், செந்தி

பதில் :1. விநாயகர் என்பதே சரி வினாயகர் என்பது தவறு. வி+நாயகர்= தனக்கு மேல் ஒரு தலைவர் இல்லாதவர் என பொருள்படும். எனவே வினாயகர் என்பது தவறு.

2. செந்தில் என்பதே சரி செந்தி என்பது தவறு. செம்மையான + இல் = செந்தில் எனப் பொருள்படுவதால் செந்தில் என்பதே சரி. இளங்கோவடிகள் 'சீர்கெழு செந்திலும்' எனப் பாடியுள்ளார்.

''முருகனே செந்தில் முதல்வனே மாயோன் மருகனே'' என்ற பாடலினை பாடும் போது சிலர் 'செந்தி' எனப் பாடுவர். இது தவறாகும்.

கேள்வி : சிவாலயங்களில் ''பஞ்சமூர்த்திகள் புறப்பாடு'', ''பஞ்சபுராணம் ஓதுதல்'' என்னும் வழக்கத்தில் பஞ்சமூர்த்திகள் யாவர்?

பதில் : சிவபெருமான், அம்பிகை, விநாயகர், முருகர், சண்டேஸ்வரர் ஆகிய ஐந்து மூர்த்திகளின் திருவுருவங்களை உலா எழுந்தருள்வித்தல் 'பஞ்சமூர்த்திகள் புறப்பாடு' எனப்படும்.

மூவர் அருளிய தேவாரப் பாடல்களில் ஒன்று மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம். திருக்கோவையாரில் ஒன்று, கருவூர்த்தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடியருளிய திருவிசைப்பாவில் ஒன்று, சேக்கிழார் அருளிய பெரிய புராணப் பாடல்களில் ஒன்று- ஆக ஐந்து பாடல்களை பூசைவேளைகளில் காலச் சுருக்கம் கருதிப் பாடுதல் 'பஞ்சப்புராணம் ஓதுதல்' எனப்படும்.

## சீலர்களால் சிறப்புப்பெற்ற திருத்தலங்கள்

| | | |
|---|---|---|
| அருணகிரிநாதர் | - | திருவண்ணாமலை |
| அருணந்தி சிவாச்சாரியார் | - | திருத்துறையூர் |
| உமாபதி சிவாச்சாரியார் | - | சிதம்பரம் |
| கருவூர்த் தேவர் | - | கருவூர் |
| குகைநமச்சிவாயர் | - | திருவண்ணாமலை |
| சிவகாமியாண்டார் | - | கருவூர் |
| சிவகோசரியார் | - | திருக்களத்தி |
| சிவப்பிரகாசசுவாமிகள் | - | பழையாறை, வடதளி |
| சேக்கிழார் | - | திருநாகேச்சுரம், குன்றத்தூர் |
| தாயுமானவர் | - | திருச்சிராப்பள்ளி |
| திருச்சிற்றம்பலநாடிகள் | - | மாயூரம் (சித்தர்காடு) |
| திருமாளிகைத் தேவர் | - | திருவாவடுதுறை |
| திருவள்ளுவர் | - | மயிலாப்பூர் |
| திலகவதியார் | - | திருவதிகை |
| நம்பியாண்டார் நம்பி | - | திருநாரையூர் |
| பட்டினத்தார் | - | திருவிடைமருதூர், திருவொற்றியூர் |
| பத்திரகிரியார் | - | திருவிடைமருதூர் |
| மறைஞான சம்பந்த சிவாச்சாரியார் | - | சிதம்பரம் |
| மெய்கண்ட தேவர் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| ஹாதத்தசிவாச்சாரியார் | - | கஞ்சனூர் |

# மூதுரை காட்டும் முதுநெறிகள்



டாக்டர் பு.ஏ.இராமையா,இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
தலைமைச் செயலகம், சென்னை - 9.

தமிழ்த்தாயின் தவப்புதல்வியான ''மூதாட்டி'' என்று மூதுலகம் போற்றி வருகின்றது.

மூதாட்டி ஔவை மொழிந்த நூல் என்பதால் ''மூதுரை'' என்றே நூல் பெயரும் வழங்கிடும் சிறப்பைக் காண்கிறோம்.

ஔவையார் பன்னெடுங்காலம் இப்பைந்தமிழ் நாட்டில் வாழ்ந்து சிறந்து தம் பாட்டுத் திறந்தாலே இவ்வையத்தைப் பாலித்தவர் என்று தமிழ் வரலாறு கூறுகின்றது.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சிக்கு ஒரு அபூர்வ - அற்புத நெல்லிக்கனி கிடைத்தது.

அந்த அதிசய அற்புத நெல்லிக்கனியின் மருத்துவ குணம் என்னவென்றால், அதை உண்டவர் நீண்ட நெடுங்காலம் நோய் நொடியில்லாமல் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெற்றிருப்பர் என்பதாகும்.

தம் அரசவைக்கு வருகை தந்து சிறப்பித்த ''உலகமகா அருட்கவி''யாம் ஔவைக்கு அபூர்வ நெல்லிக்கனியை வழங்கி உபசரித்தான் அதியமான் நெடுமான் அஞ்சி.

ஔவையும் அக்கனியை உண்டார்., உண்டபின்பே அதன் அபூர்வ மருத்துவ குணத்தை விவரித்தான் நெடுமான் அஞ்சி.

''நீஅரசன், அதிக நாள் வாழ வேண்டியவன். மக்களைக் காக்க வேண்டியவன். நீஅருந்த வேண்டிய அருந்தவக் கனியை எனக்கு ஏன் வழங்கினாய்?'' என்று வினவினார் ஔவையார்.

''என்போல் அரசர்கள் ஏராளமாக உள்ளனர். ஆனால் தாயே! உம்போல் அருளரசி யாவருளர்? நான் உண்டு நீண்ட ஆயுள் பெற்றால், என்னால் இத்தகடூர் மட்டுமே நலம் பெறும். ஆனால் அன்னையே! நீர் உண்டால் இத்தமிழ் கூறு நல்லுலகம் முழுதும் கடல் உள்ள அளவும், கதிர் உள்ள அளவும் பொலிவு பெறும். அதை எண்ணியே உமக்கு இந்தக் கனியை யான் உண்ணத் தந்தேன்'' என்று உவகை பொங்கக் கூறினான் அதியமான் நெடுமான் அஞ்சி.

அந்த அபூர்வ கனியை உண்ட ஔவையாரும் இப்பூவுலகில் நின்று நிலை பெற்று வாழ்கின்றார். அபூர்வ கனியை ஔவைக்கு உண்ணத் தந்து அதியமான் நெடுமான் அஞ்சியும் இப்பூவுலகில் நின்று நிலை பெற்று வரலாற்றில் வாழ்கின்றான். என்னே வியப்பு!

"சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்குச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே!....
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும!" *(புறம்.91)*

என வரும் புறநானூற்றுப் பாடலால் அதியமான் நெடுமான் அஞ்சியும், தமிழ்கூறு நல்லுலகில் என்றும் வரலாறாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். ஔவை மூதாட்டியின் அருந்தமிழ்ப் பாக்களும் அவர் உண்டு மகிழ்வுற்ற ''நெல்லித் தீங்கனி'' என்றென்றும் நிலைத்து நிலைபெற்று மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ்வித்துக் கொண்டுள்ளன.

''நெல்லித் தீங்கனி'' எவ்வாறு அபூர்வ மருத்துவ குணம் கொண்டு விளங்கியதோ அதைப் போல ஔவை மூதாட்டியின் அறநூல்களும் அபூர்வ மருத்துவ குணம் கொண்டு மக்களை நலமுற வாழ்வித்துக் கொண்டுள்ளன.

''மூதுரை'' எனச் சிறப்பிக்கப்படும் நீதிநூல் ''வாக்குண்டாம்'' எனத் தொடங்குகின்றது.

''வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம், மாமலராள்
நோக்குண்டாம் மேனி வடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு''

இதுவே கடவுள் வாழ்த்தாய் அமைந்து பைந்தமிழ்ப் பாலகர்க்குப் பக்திநெறி போதிக்கின்றது.

''வாக்குண்டாம்'' எனக் கலைமகளின் திருவருளும், ''மாமலராள் நோக்குண்டாம்'' எனத் திருமகளின் திருவருளும், ''மேனிநுடங்காது'' என்பதால், நோய்கள் இலையாக்கும் மலைமகளின் பேரருளும் விநாயகரை வழிபட ஒருங்கு வாய்க்கும் என்பதாக இக்கடவுள் வாழ்த்துப் பாடலில் தெளிவு படுத்துகின்றார் ஔவை மூதாட்டியார்.

''இக்கடவுள் வாழ்த்து'' நீங்கலாக, 30 மிக

அரிய வெண்பாக்கள் இம் ''மூதுரை'' நூலில் திகழ்கின்றன.

அவற்றுள், முதல் பாடல் கைம்மாறு எண்ணாமல் மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

கைம்மாறு கருதாது உதவும் உன்னத வாழ்விற்கு வான்மழையை உவமையாக்கி மகிழ்ந்தார் வள்ளுவப் பெருந்தகை.

''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு''

என்பது திருக்குறள்.

ஔவையார் அதனினும் எளிதான உவமையை நம் உளங்கொள்ள எடுத்துக் காட்டுகின்றார். வயல் வெளிகளில் எங்கும் வளர்ந்து நிற்கும் தென்னை மரத்தை உவமை காட்டும் ஔவையாரின் மூதுரைப் பாடலை மகிழ்வுடன் காணுங்கள்.

''நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா- நின்று
தளரா வளர்தெங்கு தான் உண்ட நீரைத்
தலையாலே தான்தரு தலால்''
(மூதுரை.1)

''நீஎன்ன எனக்கு செய்தாய்? நான் ஏன் உனக்கு உதவ வேண்டும்?'' என்பதே இன்றைய மக்களிடம் காணப்படும் மனப்போக்காகும்.

இத்தகைய மனப்போக்குகளே மண்ணுலகைப் பாழ்படுத்தி இலஞ்சலாவண்யப் படுகுழியில் மக்களை விழ வைக்கின்றன.

''கொடுக்கும் ஒருவனுக்கே உதவுதல் வேண்டும்'' என்ற எண்ணமே இவ்வுலகைக் கெடுக்கின்றது. ''இவன் குறைவாகக் கொடுத்தான்.... இவன் அதிகமாகக் கொடுத்தான்.... இவன் அவனினும் அதிகமாகக் கொடுத்தான்'' என்று எதற்கும்லஞ்சம் நிர்ணயிக்கப் படுவதற்குக் காரணமாகத் திகழ்வதுதான் கைமாறு வேண்டும் கடப்பாடு ஆகும்.

இத்தகைய கைமாறு வேண்டும் கடப்பாடுகளை நம் அறநூல்கள் ஒருபோதும் ஏற்பதில்லை.

மனிதர்கள் அன்பினால், நேர்மையால், மனித நேயத்தால் ஒருவர் மற்றவர்க்கு உதவியாக வாழ்வதே வாழ்க்கை சிறக்கும் வழி என்பதை நம் அறநூல்கள் தெள்ளத் தெளிவாகத் தெளிவுபடுத்துகின்றன.

வான்மழை போல் கைமாறு கருதாமல் உதவி செய்து வாழ வேண்டும் என்று வலியுறுத்தினார் வள்ளுவர்.

''இதோ ! உயரவுள்ள வானத்தைப் பார்ப்பதும் உனக்குச் சிரமமாக இருக்கும் என்று எண்ணுவாய் ! ஆனால் மனிதனே! மண்ணைப் பார்! மண்ணில் வளர்ந்து நிற்கும் தென்னையைப் பார். அது தன் உறிஞ்சிய நீரை - அது உப்பு நீராயினும் - அழுக்கு நீராயினும்- அதனை இனிய நீராய்- இளநீராய் தலையாலே தாங்கித் தருகிறது அல்லவா! அதைப் போல உதவியைக் கைமாறு கருதாமல் மக்கள் செய்து இன்புறுவார்கள். ஆனால், அவ்வுதவி ''தானுண்ட தலையாலே தரும் தெங்கிளநீர்போல்'' செய்தவருக்குத் திரும்பக் கிடைப்பது உறுதியிலும் உறுதி. அது வைய நியதி என்று ஔவையார் மூதுரையின் முதற்பாடலில் இனிதே எடுத்துக் காட்டுகின்றார்.

மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வது கடமை; கைம்மாறு கருதாமல் உதவி செய்து வாழ்வதுவே வாழ்க்கை ; இவ்வாறு எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு ஏற்றமிகு அறிவுரையை மூதுரையின் முதற்பாடலில் தெளிவு படுத்தியுள்ளார். தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வி நம் ஔவை மூதாட்டியார்.


பாடலை மீண்டும் படியுங்கள்; மனதில் இருத்துங்கள் . ஔவை காட்டும் இனிய வழியில் வாழ்க்கைப் பயணம் தொடருங்கள்.

''நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா- நின்று
தளரா வளர்தெங்கு தான் உண்ட நீரைத்
தலையாலே தான்தரு தலால்''
(மூதுரை.1)



# திருத்தல உலா


இந்து சமயத்தின் இரு கண்களாக இருப்பவை சைவமும், வைணமும் ஆகும். இவை இரண்டும் தமிழகத்திலும், அகில உலகிலும் மனித வாழ்க்கை யோடு இணைந்து வேரூன்றி கால்பரப்பி, இலைப் பரப்பிப் பூத்து செழித்து வளரத் தொடங்கியது தமிழகத்தில்தான் எனவாதிடுவர்,



அதற்கு ஆதாரமாகத் தமிழகத்தில் உள்ள சைவ, வைணவத் தலங்களைக் கூறலாம். இவை வட இந்தியாவிலும், இந்தியாவை ஒட்டியுள்ள பகுதிகளிலும் பரவத் தொடங்கியதற்குக் காரணம் அவை தமிழகத்தில் ஊன்றிய வேர்தான் என்றால் மிகையாகாது. மனித வாழ்க்கைக்குத் தேவையானவைகளை அத்தியாவசிய இனங்களை உள்ளடக்கியவை சைவமும், வைணவமும் ஆகும்.

போர் மேகங்களும், வல்லரசு போட்டிகளும் வளர்ந்து வரும் இந்நாளில் மனித வாழ்விலிருந்து விலகிப் போய் விடாமலும், தன் கருத்துக்களைத் திணித்து பிரசாரம் செய்யும் நோக்கத்தில் போகாமலும் தனக்கென ஒரு சாத்வீகமான முறையில் வளர்ந்து வருபவை சைவமும், வைணவமும் ஆகும்.

இவை நிலைத்து நிற்பதற்கும், நாளொரு மேனியாய் வளர்வதற்கும் பெருந்துணை புரிபவை சைவ, வைணவத் திருக்கோயில்களாகும். இத்திருக்கோயில்கள் சுமார் 1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறுகளுடைய கோயில்கள் முதல் 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் முடிய உள்ள பாடல் பெற்றத் திருத்தலங்கள், மங்களாசாசனமான திருக்கோயில்கள், முனிவர்கள் தோன்றிய திருத்தலங்கள், புராணச் சிறப்பால் புகழ்பெற்ற மக்கள் அபிமானத் தலங்கள் எனப் பலவகைத் திருத்தலங்கள் உள்ளன.



இத்திருத்தலங்களுக்கு யாத்திரை சென்று வருவது என்பது புனித செயலாகும். போக்குவரத்து வசதிகள் அதிகமில்லாத காலத்திலேயே காசிக்குச் செல்வதும், இராமேஸ்வரம் வருவதும், பத்ரிகாச்சலமும், திருவரங்கமும், திருவனந்தபுரம் இதுபோன்ற ஏனைய பிற திருத்தலங்களும் மனிதர்களை ஒருங்கிணைப்பதற்கு ஆதாரமாக இருந்துள்ளன என்றால் அது மிகையாகாது.

இத்திருத்தலங்கள் ஆழ்வார்கள் நாயன்மார்களால் பாடப்பெற்றவைத் தவிர, முனிவர்கள் வணங்கிப் பேறு பெற்றவை எனவும், குருவாகிய ஆசாரியர்கள் அவதாரத்தினாலும் சிறப்புப் பெற்ற திருத்தலங்கள், தனிப்பட்ட மன்னர்களால் எடுக்கப்பட்ட திருத்தலங்கள் என்பன போன்ற கட்டுக்குள் வரும்.

இவ்வாறு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டத் திருத்தலங்கள் நாயன்மார்களால் பாடப்பட்ட திருத்தலங்கள், முனிவர்களால் போற்றி வணங்கிப் பேறு பெற்றத் திருத்தலங்கள், ஆசாரியர்கள் அவதரித்தத் திருத்தலங்கள், மன்னர்களால் சிறப்பித்து கட்டப்பட்டத் திருத்தலங்கள் என பட்டியலிடப்பட்ட சைவத் திருத்தலக்கள் பின்வரும் பாடலில் தெரிய வருகிறது.

''துங்கடை கயிலாய முதலா வைத்து
துளுவொன்று தொண்டைவளநாட் டென்னான்கு
நங்குநடு நாட்டிருபத் திரண்டு பொன்னித்



தலநூற்றுத் தொண்ணூறு மலைநாட்
டொன்று

கொங்கேழு சிங்களத்தி லிரண்டு வைகை

கொழி தமிழ்நாட்டீரேழு முதலாச்சூலச்

செங்கையார் தவமிருநூல் றெழுபா
னான்கிற்

றெக்கிண்பாற் கயிலாயர் திருக்குற்றாலம்''

திருக்குற்றாலத் தலபுராணம்.

காவிரிக்கு வடகரையில்

| | | |
|---|---|---|
| அமைந்துள்ள திருத்தலங்கள் | - | 63 |
| காவிரிக்குத் தென்கரையில் | | |
| அமைந்துள்ள திருத்தலங்கள் | - | 127 |
| ஈழநாட்டுத் திருத்தலங்கள் | - | 2 |
| பாண்டிய நாட்டுத் திருத்தலங்கள் | - | 14 |
| சேர நாட்டுத் திருத்தலங்கள் | - | 1 |
| கொங்கு நாட்டுத் திருத்தலங்கள் | - | 4 |
| நடு நாட்டுத் திருத்தலங்கள் | - | 22 |
| தொண்டை நாட்டுத் திருத்தலங்கள் | - | 32 |
| துளுவ நாட்டுத் திருத்தலங்கள் | - | 1 |
| வட நாட்டுத் திருத்தலங்கள் | - | 5 |
| கூடுதல் | - | 274 |

இவற்றில்,

1. மூவராலும் பாடப்பெற்ற திருத்தலங்கள் - 91
2. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவரால் பாடப்பெற்ற திருத்தலங்கள் - 87
3. திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி ஆகிய இருவரால் பாடப்பெற்ற திருத்தலங்கள் - 6
4. திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய இருவரால் பாடப்பெற்ற திருத்தலங்கள் - 17
5. திருஞானசம்பந்தரால் மட்டும் பாடப்பெற்றத் திருத்தலங்கள்- 39
6. திருநாவுக்கரசரால் மட்டும் பாடப்பெற்றத் திருத்தலங்கள்- 18
7. சுந்தரமூர்த்தியால் மட்டும் பாடப்பெற்றத் திருத்தலங்கள் - 10

ஆகக்கூடுதல் - 274

இவற்றுள் மாணிக்க வாசக சுவாமிகளால் பாடப்பெற்றவை- 25

திருப்புகழ் பாடப்பெற்றவை- 100

**விஷ்ணுத் திருத்தலங்கள்**

''ஈரிருபநாஞ் சோழன் ஈரொன்ப தாம்பாண்டி


ஓர்பதின்மூன் றாமலைநா டோரிரண்டார்
- சீர்நடுநா

டாறேடீ ரெட்தொண்டை யல்வடநா
டாறிரெண்டு

கூறுதிரு நாடொன்றாக் கொன்''

**நூற்றெட்டு திருப்பதிகள் என்புவை**

| | | |
|---|---|---|
| திருநாடு என்னும் பரமபதம் | - | 1 |
| சோழநாட்டில் | - | 40 |
| பாண்டிய நாட்டில் | - | 18 |
| மலை நாட்டில் | - | 13 |
| நடு நாட்டில் | - | 2 |
| தொண்டை நாட்டில் | - | 22 |
| வட நாட்டில் | - | 12 |
| ஆக | - | 108 |




**நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் அருளிச் செய்த ஆழ்வார்கள் பன்னிருவர்**


1. நம்மாழ்வார்
2. பொய்கையாழ்வார்
3. பூதத்தாழ்வார்
4. பேயாழ்வார்
5. திருமழிசையாழ்வார்
6. பெரியாழ்வார்
7. ஆண்டாள்
8. குலசேகராழ்வார்
9. தொண்டரடி பொடியாழ்வார்
10. திருப்பாணாழ்வார்
11. மதுரகவியாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

**முனிவர்கள் பிரதிஷ்டையாலும், ஆழ்வாராசாரியர்களின் அவதாரங்களினாலும் ஏற்றம் பெற்ற திருத்தலங்களும் உள்ளன.**

இத்தலங்கள் மட்டும் அல்லாமல் இன்னும் வரலாற்றுச் சிறப்பு மிக்கத் திருத்தலங்கள் பற்றிய குறிப்புக்கள் கட்டுரைகளாக சற்று கூட மிகைப் படுத்தாமல் ஒவ்வொரு இதழ் தோறும் வண்ணத்தில் ஒளியாக வெளிவர உள்ளன.



நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கண்ணபுரம் அருள்மிகு சௌரிராஜப் பெருமாள் திருக்கோயில் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், மாடம்பாக்கம் அருள்மிகு தேனுபுரிஸ்வரர் திருக்கோயில் திருத்தல உலா ஆகியன இவ்விதழில் துவக்கப்பட்டுள்ளது.



# வேண்டாமை என்னும் மனப்பான்மை வேண்டும்

டி.சந்திரசேகரன்., இ.ஆ.ப.,
மாநில தேர்தல் ஆணையர்

இறைவனுடைய அருள் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் பல விஷயங்களில் நமக்கு 'வேண்டாமை மனப்பான்மை' இருக்க வேண்டுமென்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். ஒன்றை வேண்டுவதற்குப் பலவற்றை வேண்டாமையே சிறந்த வழியாகும் என்பது கருத்து.

எந்தவொன்றையும் வேண்டாமையைப் போன்ற சிறந்த செல்வம் எவ்வுலகத்திலும் இல்லையென்று வள்ளுவர் அருளியிருக்கிறார்.

**"வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை**
***யாண்டும் அஃதொப்பதில்".***

இப்படிக் கூறியுள்ள வள்ளுவர், எதையும் வேண்டாமல் யாராலும் இருக்க முடியாது என்பதையும் எடுத்துக் காட்டுவதே போன்று பின்வரும் குறைகளையும் பாடியுள்ளார்.

**"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை, மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும்"**

"ஒன்றை விரும்ப வேண்டினால் பிறவாமையையே விரும்ப வேண்டும். ஒரு பொருளையும் வேண்டாமலிருந்தால் அப்பிறவாமை தானே ஏற்படும்" என்பது இதன் பொருள்.

'வேண்டாமை' நோன்பு அனுஷ்டித்த பெரியார்களில் தொண்டரடிப் பொடியாழ்வாரும் ஒருவர். இறைவனை மனமாரத் துதிக்கும் சுகம் மட்டும் தனக்குக் கிடைக்குமானால், இந்திர லோகத்தை ஆளுகின்ற பதவி கிடைத்தாலும் நான் வேண்டேன் என்று பாடுகிறார்.

பிறவியே வேண்டாமென்று இந்த ஆழ்வாரும் கதறுகிறார். அதற்கு அவர் கூறும் காரணங்களும் எல்லோராலும் எளிதில் உணரத்தக்கவையே!

**"வேத நூற்பிராயம் நூறு மனிதர் தாம் புகுவரேனும்**
**பாதியு முறங்கிப் போகும்! நின்றதிற் பதினையாண்டு**
**பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம்**
**ஆதலாற் பிறவி வேண்டேன்! அரங்கமா நகருளானே!**

அதாவது, "ஸ்ரீரங்கத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் அரங்கநாதப் பெருமானே! வேத சாஸ்திரங்களில் மனிதர்களுக்கு நூறு வயது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த நூறு வயது வாழ்வதாய் வைத்துக் கொண்டாலும் அதிற் பாதியான ஐம்பது ஆண்டுகள் நித்திரையில்

## தேவியர் அருள்பாலிக்கும் விசேட தலங்கள் சில

| | |
|---|---|
| திருவானைக்கா | - அகிலாண்டேஸ்வரி |
| காஞ்சி | - காமாட்சி |
| திருவண்ணாமலை | - உண்ணாமுலையம்மை |
| அவிநாசி | - கருணாம்பிகை |
| திருஆமாத்தூர் | - முத்தாம்பிகையம்பை |
| திருவாரூர் | - கமலாம்பிகை |
| மதுரை | - மீனாட்சியம்மை |
| திருவையாறு | - தர்மசம்வர்த்தகி (அறம் வளர்த்த நாயகி) |
| திருவொற்றியூர் | - வடிவுடையம்மை |
| திருக்கழுக்குன்றம் | - திருபுரசுந்தரியம்மை |
| திருக்காளத்தி | - ஞானப்பூங்கோதையம்மை |
| குடமூக்கு | - மங்களநாயகி |
| குற்றாலம் | - குழல்வாய்மொழியம்மை |
| திருச்சிராப்பள்ளி | - மட்டுவார் குழலியம்மை |
| திருநள்ளாறு | - போகமார்த்தபூண் முலையம்மை |
| நாகை | - நீலாயதாட்சியம்மை |
| திருநெல்வேலி | - காந்திமதியம்மை, வடிவம்மை |
| திருப்பாதிரிப்புலியூர் | - பெரியநாயகி |
| வைத்தீஸ்வரன் கோயில் | - தையல்நாயகி |
| திருமறைக்காடு | - யாழைப்பழித்த மொழியம்மை (வேதாரண்யம்) |
| திருமுல்லைவாயில் | - கொடியிடைநாயகி |
| மேலூர் | - திருவுடையம்மை |

கழிந்துவிடும். மீதியுள்ள ஐம்பது ஆண்டுகளில் பதினைந்து வருஷங்கள் பகுத்தறியும் சக்தியில்லாத பாலப் பருவத்தில் கழிந்து விடுகிறது. மீதியுள்ள ஆயுளில் பெரும் பகுதி நோய், பசி, மூப்பு, துக்கம் இவற்றால் அழிந்து விடுகிறது. ஆகவே பயனற்ற இந்தப் பிறவி எனக்கு வேண்டாம் என்று ஆழ்வார் கூறுகிறார்.

பற்றற்ற நிலையே வேண்டாமை. பிறவிக்கும் அதன் துன்பங்களுக்கும் காரணம் பற்றுகள்தாம். எனவே பற்றுக் கோடுகளுக்குத் தகுதி வாய்ந்தவை யெல்லாம் நமக்கு வேண்டாம்.

வேண்டாமை விரதம் கொண்ட தொண்டரடிப் பொடியாழ்வாரைப் பற்றிய பெருமையை திருவரங்கப் பெருமாள் அரையர் பின்வருமாறு பாடுகிறார்.

**"மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர்**
**கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் உற்ற**
**திருமாலைப் பாடும்சீர்த் தொண்டரடிப் பொடியெம்**
**பெருமானை எப்பொழுதும் பேசு."**

வேண்டாமை என்பதன் பொருளே 'அவசியமான ஒன்றைமட்டும் வேண்டுதல்' என்பதுதான்!

மனிதன் சுகத்தை வேண்டாமலிருக்க மாட்டான். பண்டிதனாயினும் பாமரனாயினும் சுக நாட்டமின்றி இருக்க முடியாது. எதை வேண்டுவது எதிலே சுகம் உள்ளது என்பதுதான் பிரச்சினை.

சுகம் வேண்டுமானால் துக்கம் நீங்க வேண்டும். துக்க நிவர்த்தியே சுகப் பிராப்தி. துக்கம் நீங்க வேண்டுமானால் துன்பங்கள் அகல வேண்டும். யாருக்குத் துன்பங்களே உண்டாவதில்லை? வள்ளுவர் விடை தருகிறார்.

**"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை யில"**

விருப்பும் வெறுப்பும் அற்றவனாகிய இறைவனுடைய திருவடி நிழலை அடைந்தோர்க்கு எங்கும் என்றும துன்பங்கள் உண்டாவதில்லை. தொடர்ந்து நமக்கு ஞாபகம் வருகிறது பின்வரும் அப்பர் பெருமானின் அருந்தமிழ்ப் பாட்டு.

**"மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே!"**

அப்பரின் அழகு வாய்ந்த இப்பாட்டுக்கு இணை எந்தப் பாட்டு?

அத்தகைய பெருமை வாய்ந்ததும் மேலான சுகத்தைத் தரத்தக்கதுமான இறைவனது திருவடி நிழலை நாம் வேண்டுவோமானால் ஏனைய எல்லாவற்றையும் நாம் வேண்டாதவர்கள் ஆவோம்.

எனவே வேண்டாமை என்பது வேண்டத் தக்க ஒன்றை அதாவது இறைவனது திருவருளை வேண்டுவதேயாகும்.

# வன விசேஷ நாமத் திருத்தலங்கள்

| | | |
|---|---|---|
| கடம்பவனம் | - | மதுரை |
| குண்டலிவனம் | - | திருவக்கரை |
| சண்பக வனம் | - | திருநாகேச்சுரம் |
| சூதவனம் | - | திருவுசாத்தானம் |
| மகிழவனம் | - | திருநீடூர் |
| மதுவனம் | - | நன்னிலம் |
| மறைவனம் | - | வேதாரண்யம் |
| மாதவி வனம் | - | திருமுருகன் பூண்டி |
| வில்வ வனம் | - | திருவாடனை |
| வேணுவனம் | - | திருநெல்வேலி |

# குரு பக்தி

தென்னம்பட்டு
ப.ஏகாம்பரம்



'ஒருத்தன் என்னிடம் பக்தி செலுத்திக் கொண்டேயிருந்தால் நான் யார், எப்படிப்பட்டவன் என்று உள்ளபடியே தெரிந்து கொள்கிறான். இம்மாதிரி என்னை உள்ளபடி தெரிந்து கொண்டபின், எனக்கு வேறாக இல்லாமல் என்னுள்ளேயே புகுந்து விடுகிறான்.

-பகவத் கீதை

குருவைப் பரிபூரணமாய்ப் பக்தி செய்வதின் மூலமே உயர்ந்த ஞானத்தை அடைய முடியும்.

குருபக்தி உள்ளவனுக்குச் சாஸ்திரங்களைப் படிக்காமலேயே ஞானம் சித்திக்கும் என்பதற்குச் சாந்தோக்கிய உபநிஷதம், சத்தியகாமனுடைய கதையைக் கூறுகிறது.

கோத்திரம் தெரியாத சத்தியகாமனுக்குக் குருபிரான் உபநயனம் செய்வித்து, ஆசிரமத்துப் பசுக்களை மேய்க்கும் பணி செய்யக் கட்டளையிடுகிறார். குரு சேவையிலேயே ஞானமடைகிறான் சத்தியகாமன்.

குருவில்லாமல் ஞானமோ, வீடு பேறோ அடைய முடியாது.கணவன் தான் பெற்ற சுகபோகங்கள் அனைத்தும் முழு மனதாய் மனைவி அனுபவிக்கத் தருகிறான். அவள் விரும்பியதையும் அவளடைய வழி செய்கிறான்.

அவ்வாறே சிக்கெனப் பிடித்த சீடனுக்குக் குருவானவர் ஞானவித்தைகள் அனைத்தையும் அறிய வைக்கிறார்.

குரு அளிக்கும் ஞான அமுதத்தைச் செவியை வாயாக்கி, நெஞ்சைக் கனளாக்கி ஏற்க வேண்டும்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என வான்பற்றி நின்ற மறை பொருளை' நமக்கெலாம் காட்டி உய்விக்க வரும் குருநாதரைக் குறிப்பறிந்து ஒழுக வேண்டும்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே!

- திருமூலர்

மனைவி, கணவனிடம் காட்டும் கள்ளங்கபடமற்ற அன்பு, ஒழுக்கம் போல, எண்ணமும் செயலும் நேர்பட நிற்கக் குருவைப் பக்தி செய்தல் வேண்டும்.

வைணவ ஆசாரியர் ஸ்ரீ இராமாநுஜர்க்குத் தீங்கிழைக்க நினைத்தான் சோழன் குலோத்துங்கன்.

இராமாநுஜரை மாறுவேடத்துடன் சோழ நாட்டிலிருந்து ஓய்சள நாட்டிற்கு வெளியேறச் செய்கிறார் கூரத்தாழ்வார் எனும் பிரதம சீடர்.

பின் அரசவைக்கு இராமாநுஜர் போல் வேடமிட்டுக் கூரத்தாழ்வார் செல்கிறார்.'

மன்னர்க்கும், ஆழ்வார்க்கும் விவாதம். வைணவனாயிருந்தும், நல்லூரான் எனும் சோழ நாட்டமைச்சன் ஆழ்வாரைக் காட்டிக் கொடுத்து விடுகிறான்.

கோபமுற்ற மன்னன், கூரத்தாழ்வார் விழிகளைப் பிடுங்கி விடக் கட்டளையிடுகிறான்.

இழந்த கண்களுக்காகக் கவலைப்படாமல் குருவைக் காத்ததற்காக ஆழ்வார் பெரிதும் மகிழ்ந்தார்.

வைணவம் விளங்க வைக்க அவர் செய்த தியாகம் ஈடு இணையற்றது.

இன்னொரு கதையைக் கேளுங்கள்!

குருவின் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு, அரசனுடைய மணிமகுடத்தைக் கவர்ந்த இரு சீடர்கள் கோட்டை மதில் சுவர் வழியே இருந்த துவாரத்தின் வழி கடக்க முயல்கின்றனர்.

ஒருவர் வெளியேறிவிட்டார். மற்றவர் கடக்க முயலும்போது, உள்ளேயிருந்த காவலர்கள் காலைப் பிடித்துக் கொண்டனர்.

தலை வெளியே, உடல் மதில் சுவருள், கால் காவலர் பிடியில்.

'சகோதரா, என்னைக் காப்பாற்ற முயலாதே! அது வீண் முயற்சி! மகுடத்தைக் குருவிடம் சமர்ப்பணம் செய்! நான் யாரெனத் தெரிந்தால் நம் குருநாதர்க்கு ஆபத்து. எனவே சற்றும் யோசியாமல், என் தலையைத் துண்டித்து, நீயே எடுத்துச் சென்றுவிடு!'

இது குருபக்தி கூறும் கர்ண பரம்பரைக் கதையே எனினும் இவ்வாறே ஞானிகள், சித்தர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் தங்கள் குருபிரானுக்காக உடல், பொருள், ஆவி அனைத்தும் சமர்பித்தே ஞானம் பெற்றனர்.

எந்த சமயமாயினும், வேதமாயினும் குரு பக்தியைப் பெரிதெனப் போற்றுகிறது.

குருவிடம் சத்தியமே பேசவேண்டும். குயுக்தி எண்ணம் கூடாது. பரிசுத்த ஒழுக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டும்.

வித்தானது மண்ணோடு ஒட்டி உறவு கொண்டு செடியாகி, மரமாகி வானளாவி வளர்கிறதோ. அவ்வாறே ஆசானை ஆழ்ந்த பக்தியுடன் பற்றுவதின் மூலம் ஞானம் நன்றாக விளைவேறும்.

'அன்பே சிவம்' என்கிறோம். குருவிடம் காட்டும் அன்பே நம்மைச் சிவமாக்கும்.

அவர்களே எழுதா மறை, வந்த வேதம். அவர் சொற்படி நடந்தால் புண்ணியம் தழைக்கும், ஜீவன் கடைத்தேறும்.

எவனொருவன் தன் நினைவாகிய எண்ணத்தில் சொற்படி இருக்கிறார் என்ற அச்சத்தோடு, செய்யும் செயலுக்கு அவரையே சாட்சியாக்கி வாழ்கிறானோ அவன் நினைத்தது மட்டுமல்ல, நினையாத சகல சம்பத்தும் கிடைக்கும்.

ஆம், தொட்டது அனைத்தும் பொன்னாகும்.

குருவின் குறிப்பறிந்து நடக்க வேண்டும். அவருக்கு எதன் மேல் அருவருப்பாய் இருக்கிறதோ, அந்தப் படிப்பை, கேள்வியை, பார்ப்பதை நீக்கி அவர் எண்ணத்தின் இலக்கில் நிற்க வேண்டும்.

அவர் முன்பாக நமக்கேற்படும் பக்தியால், நம் அஞ்ஞானம் தகிய, மெய்ந்நிலைக்கேற்றும்.

அவர்கள் அன்பு நிழலில் சதா நிற்க வேண்டும். அதுவே சொர்க்கம். அவர்கள் வெறுப்பே நரகம். வாழ்வில் கடைத்தேற எளிய உபாயம் இதுவே.

செயல், எண்ணம், பேச்சு இவையெல்லாம் குரு நினைவோடு செய்யின் அதுவே தவம்.

குருபக்தி உள்ளவனுக்குச் சாஸ்திரங்கள், வேதங்கள், ஆகமங்கள் இவற்றைப் படிக்காமலேயே ஞானம் சித்திக்கும். படிக்காத மேதைகள் ஆவர்.

உலகப் பொருள் மீது குருவிற்கு இச்சையிலையெனினும், உலக நலனுக்காக அவருக்கு உற்றுழி உதவியும், உறுபொருள் விரும்பி அளித்தும் போஷிக்க வேண்டும்.

பெரும் பசியன் உணவைக் கண்டாற்போல், பெருந்தாகமுற்றவன் தடாகத்தைக் கண்டாற்போல், தரித்திரன் நவரத்தினக் குவியலைக் கண்டாற் போல், குருவைக் கண்டவுடன் சீடன் ஆனந்த மயமாகிறான்.

அத்தகையோனுக்குக் குருவைப் பிரிந்த ஒரு நொடிப் பொழுதும், ஒரு யுகங்கோடி காலமாகும்.

சிவலோக வாழ்விலேற்றும் தெய்வீக சம்பத்தை அருளும் குருவின் உதவிக்கு வையகமும், வானகமும் அளிப்பினும் ஈடாகாது.


செய்யாமற் செய்த அவ்வுதவிக்காக, 'மறுபிறவி உண்டெனின், குருவிற்காக அவர் உறையும் ஏரியின் நாரையாகவோ, சுனையின் மீனாகவோ, அவர் எச்சில் உமிழும் வட்டிலாகவோ, சோலையின் செண்பகப் பூவாகவோ, கோயில் சிகரமாகவோ, குளமாகவோ, வாயிற்படியாகவோ பிறந்து பணி செய்வேன்' என ஊனுருக, உளமுருகப் பிரார்த்திப்பதே குருபக்தியாகும்.

'குரு, கோவிந்தன் இருவருமே நிற்கின்றனர். யார் காலில் விழுவேன்? குருநாதன் போற்றத் தகுந்தவர். அவர்தானே கோவிந்தனைக் காட்டிக் கொடுத்தார்.

- கபீர்தாசர்.

# மாடம்பாக்கத்து மகேசன்

- ஜெய உத்திரன்



தொண்டை நாட்டின் ஒரு பகுதியாய் அமைந்த மாடம்பாக்கம் வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே இருந்து இருந்தாலும் காடு தொட்டு நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி ஏரிகள் நிறைந்த இப்பகுதியையும் அதன் சுற்றுப்புறத்தையும் உருவாக்கியவர்கள் பல்லவர், பின்னர் சோழர், பிற்காலப் பாண்டியர்கள், விஜய நகர, செஞ்சி நாயக்கர்கள் போன்றவர்கள் தான்.

அன்றைய நிலையில் அச்சிட்ட நோட்டுகளும் நாணயங்களும் அதிக அளவில் புழக்கத்தில் இல்லை என்ற காரணத்தால், சுத்தப் பொன், விளை நிலம், கால் நடைகள் போன்றவை அன்றைய மனிதனுக்குச் செல்வங்களாக விளங்கின.

மாடு என்றால் செல்வம். கடற்கரையை ஒட்டியுள்ள கிராமங்கள் பாக்கம் என்று வழங்கப்பட்டன. அழகிய செல்வம் நிறைந்த கடற்கரை ஓரமாக இருந்த கிராமம் மாடம்பாக்கம் என வழங்கப்பட்டது.

இவ்வூரில் செல்வச் செழிப்பிற்கு மக்கள் பயன்பாட்டுக்காவும் தோண்டப்பட்ட திருக்குளம் சிறிய ஏரிபோன்று அகன்று விரிந்து ஆழமாக இருந்ததால் அதனைச் ‘சித்தேரி’ எனவழங்கினார்.

தொடக்கத்தில் சித்தேரிநாதர், ஆளுடைய நாயனார் கோவில் எனவும் வழங்கப்பட்ட இத்திருத்தலம் விஜய நகர காலம் முதல் தேனுபுரீஸ்வரர் என அழைக்கப்படுவதாக அறிய முடிகிறது.

கபில முனிவர் சிவலிங்கத்தை வலக்கையில் ஏந்தி இடக்கையால் பூஜை செய்ததனால் ஏற்பட்ட பாவத்தைப் போக்குவதற்காகக் காராம் பசுவாகப் பிறந்தார். சித்தேரியில் இருந்த லிங்கத்தின் மீது பால் சொரிந்து பூஜை செய்தார். பசுவைக் குளத்திலிருந்து வெளியேற்ற கற்களால் அடித்து துரத்தும் போது, இறைவன் மீது கல்லடி படாமல் நகர்ந்து, தடுமாறிய பசு இறைவன் முடி மீது தன் காலை வைக்க இறைவன் அதைத் தாங்கிக் கொண்டார். தன்னை வெளிப்படுத்த இறைவன் ஏரியைக் குருதிமயமாக்கினார். பொது மக்கள் உண்மையுணர்ந்து இறைவனை வணங்க காமதேனுவாக இருந்த கபில முனிவர் சுய உருவம் பெற்றார். லிங்கம் சித்தேரியில் இருப்பதைக்கூறி லிங்கத்தில் ஐக்கியமானார்.

இந்த உண்மையை அறிந்த மன்னன் சித்தேரிக் கரையில் சிவனுக்குத் திருக்கோயில் கட்டினான். இதனாலேயே இறைவன் சித்தேரி நாதர், சித்தேரீஸ்வரர் என அழைக்கப்பட்ட ஆளுடைய நாயனார், மாடு உருவம் தாங்கிய காமதேனுவால் பூஜை செய்யப்பட்டு கோயில் அமைந்து ஊரும் அமைந்து, சுற்றிலுமசோலைகளும் ஊரும் உருவானதால், ‘மாட’ால் அழகிய ஊராக உருவாகிய காரணத்தால் மாடு + அம் + .பாக்கம் = மாடம்பாக்கம் என்ப் பெயர்பெற்றது.

இறைவன் காம ‘தேனு’ வால் பூஜிக்கப்பட்டதால் தேனுபுரீஸ்வரர் என அழைக்கப்படுகிறார். இறைவி நம்பிராட்டி எனவும் பின்னர் தேனுகாம்பாள் எனவும் அழைக்கப்படுகிறார்.

இறைவன் தோன்றியதால் சித்தேரி எனவும் கபில மகரிஷி காராம்பசுவாக வந்து சித்தேரியில் இருந்த இறைவனை வெளி உலகிற்கு காட்டியதால் கபில தீர்த்தம் எனவும் தீர்த்தம் வழங்கப்படுகிறது. திருக்கோயிலின் தல மரமாக வில்வம் வளர்க்கப்படுகிறது.

பொதுவாகவே ஒரு கோவிலில் ஒரு ஆட்சியாண்டு மன்னனின் கல்வெட்டு இருந்தால் அதனை அந்தக் காலத்தின் திருககோயில் என சிலர் குறிப்பிடுகின்றனர். வெவ்வேறு காலத்து மன்னர்களின் காலத்து கோயில் என்பதை முற்கால கல்வெட்டை வைத்தே குறிப்பிடுகின்றனர்.

ஆனால் கல்லால் கட்டப்பட்ட சுவற்றிலே கல்வெட்டு வெட்டப்படும் பழக்கம் தமிழகத்தில் உள்ளது. இரண்டாம் குலோத்துங்கன் கால கல்வெட்டுக்கள் இத்திருக்கோயிலில் இருப்பதனால் அவர் காலத்தைச் சார்ந்தது என பலர் கூறுகின்றனர். ஆனால் நாயன்மார்களில் நால்வரில் ஒருவரான திருஞான சம்பந்தர் தனது திருக்ஷேத்திரக் கோவையில் காட்டூர் கடம்பூர் என்னும் பாடலில் ''மாட்டூர் மடப்பா சிலாக் கிராமம்'' என இத்திருத்தலத்தைப் பாடியிருப்பதால் இத்திருத்தலம் நாயன்மார்கள் காலத்திலேயே சிறப்பு பெற்றிருந்தது என அறிய முடிகிறது.



திருக்கோயில் கருவறை தொண்டை நாட்டு முதன்மையான திருத்தலங்களில் காணப்படும் தூங்கானை மாடம் என்னும் கஜபிருஷ்ட அமைப்பில் அமைந்துள்ளதாகும். கிழக்கு நோக்கி காட்சி தரும் தேனுபுரீஸ்வரர் சுயம்பு லிங்கமாகவே, சிறிய நட்டு வைத்த வெண்ணிறக் கொம்பு போன்று காட்சி தருகிறார். சுற்றிலும் மண்டபம், மண்டபத்தின் தூண்களில் அழகிய சிற்பங்கள் ஆகியவை அமைந்துள்ளன. உள்பிரகாரத்தில் வலஞ்சுழி வினாயகர், மஹா கணபதி, ஸ்ரீதேவி பூதேவியுடன் ஸ்ரீ வரதராஜப் பெருமாள், அன்னபூரணி, வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணிய சுவாமி, நடராஜர் சன்னதி ஆகியவை உள்ளன.

தெற்கு பார்த்து அமைந்துள்ள தேனுகாம்பாள் சன்னதி சற்ற பிற்காலத்தைச் சார்ந்ததாகும்.

இத்திருக்கோயில் தூண்களில் பல அபூர்வ வகை சிற்பங்கள் பல அழகு மிளிர உள்ளன. தல புராணத்தைக் காட்டும் சிற்பம், தாம்பத்ய தட்சிணாமூர்த்தி, வீரபத்திரர், கல்யாண சுந்தரேஸ்வரர், திரிபுராந்தகர், பஞ்சமுக ஆஞ்சநேயர், சங்கர நாராயணர், கஜ சம்ஹார மூர்த்தி, பஞ்சமுக லிங்கம், ஆகியவை குறிப்பிடத்தன.

'இரணியன் ஆகம் கீண்டவனின்' கோபம் தணிக்க சிம்ம முகத்தோடும், மிருக உடலோடும் பிரத்தியங்கரா தேவி, சூலினி துர்க்கையினை இறக்கைகளாகக் கொண்டு பறந்து வந்து நரசிம்மனின் கோபத்தைத் தணித்த சரபேஸ்வரர் இத்திருக்கோயிலின் மண்டபத் தூணில் அவதாரம் எடுத்துள்ளார்.

ஒவ்வொரு ஞாயிறு அன்றும் மாலை 3.30 மணிக்கு அபிஷேகம் நடந்து சரபேஸ்வரர் பூஜை 4.30 - 6.00 ராகு கால வேளையில் நடைபெறும். நிறைவேறாத பிரார்த்தனைகள் நிறைவேறவும், கூடாத திருமணங்கள் கூடிடவும் பிரார்த்தனை செய்து கொண்டு ஐந்து வாரங்கள் தரிசனம் செய்து ஆறாவது வாரம் அபிஷேகம் செய்வது பழக்கத்தில் உள்ளது. சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் முதன் முதலில் சரபேஸ்வரர் பூஜை தொடங்கி சிறப்பாக நடந்து வரும் திருக்கோயில் இதுவாகும்.

இத்திருக்கோயிலின் சுவாமி சன்னதி எதிர் மண்டபத்தின் மேல் கூரையில் சகஸ்ரதள தாமரையும், நேர்கீழே அஷ்டதள தாமரையும், அம்மன் சன்னதி எதிர் மண்டப மேற்கூரையில் நவாக்ஷரி நவகோணயந்திரமும், நேர்கீழே அஷ்டதள இதயக்கமலமும் அமைந்துள்ளது.

அதிகாரநந்தி மண்டபத்தின் மேல் தளத்தில் இந்திரன், அக்னி, எமன், நைருதி, வருணன், வாயு, குபேரன், ஈசான்யன் என்பவர்கள் வாகனத்துடன் காட்சி தருகின்றனர்.





இத்துணைச் சிறப்பும், பழமையும் உடைய நம்முன்னோர்களால் கட்டிக் காக்கப்பட்ட இத்திருக்கோயில் தற்போது தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் உள்ளது. தினமும் காலை 7.00 மணி முதல் பகல் 11.30 மணி வரையும் மாலை 4.30 மணி முதல் 7.30 மணி வரையும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும் இத்திருக்கோயிலில் காமிக ஆகம பூஜை நடைபெறுகிறது.


அருணகிரிநாதர் 'தோடறும்குழையாலே' என்ற பாடலை இவ்விறைவன் மீது பாடியுள்ளார்.

பங்குனி உத்திரத் திருவிழா, இத்திருக்கோயிலில் 3 நாட்கள் தெப்பம், திருக்கல்யாணம் என நடைபெறுகிறது. பிரதோஷம், கிருத்திகை, போன்றவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இத்திருக்கோயில் தாம்பரம் இரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. தாம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து, இராஜ கீழ்பாக்கம் வழியாக வேங்கை வாசல் செல்லும் பேருந்தில் இத்திருத்தலத்திற்குச் செல்லலாம்.

# கண்ணபுரத்து கண்ணமுதே!

K. கோவிந்தராஜன்,
தலைமையாசிரியர் (ஓய்வு)
தெற்கு மடவிளாகம், திருக்கண்ணபுரம்



''உத்பலாவதகே திவ்யே விமாநே புஷ்கரேக்ஷணம்!
சௌரிராஜமஹம் வந்தே ஸதாஸர்வாங்க ஸுந்தரம்!!''

**தலக்குறிப்பு**

பெருமாள் திருநாமம் .. மூலவர் நீலமேப் பெருமாள் உத்சவர் சௌரிராஜபெருமாள்

தாயார் திருநாமம் .. ஸ்ரீ கண்ணபுர நாயகி

தீர்த்தம் .. நித்யபுஷ்கரிணி

விமானம் .. உத்பலாவதக விமானம்

**திருத்தலப் பெருமை**

ஸ்ரீ வைஷ்ணவத்தின் பெருமை பாரிற் சிறந்தோங்க அடியார்களுக்கு அருட்பேற்றினை நல்கி ஆட்கொள்ளும்பொருட்டு ஸ்ரீ பெருமாள் கோயில் கொண்டெழுந்தருளி உள்ளதும் வைஷ்ணவ பெருமக்களால் ''திவ்யதேசம்'' என்று அழைக்கப்பெறும் 108 திருத்தலங்களுள் தலையாய சிறப்பு உடையதாக கருதப் பெறுவதுமான (நான்கு இடங்களாள) மேலவீடு திருவரங்கம் எனவும், வடக்கு வீடு திருவேங்கடம் எனவும், தெற்கு வீடு திருமாலிருஞ்சோலை எனவும் அமைந்த வரிசையுள் கீழை வீடாக ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தில் போற்றப் பெறுவது திருக்கண்ணபுரம் ஆகும். இத்தலமானது நம்மாழ்வார் ''வைகுந்தம் கொடுக்கும் பிரான்'' என்றும் திருமங்கை ஆழ்வார் ''மை வளர்க்கும் மணியுருவும் மரகதமோ மழை முகிலோ'' என்றும், பெரியாழ்வார் ''கண்ணப்புரத்தமுதே'' என்றும், ஆண்டாள் ''காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர் வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமணன்'' என்றும் மங்களா சாசனம் செய்ய பெற்றப் பெருமை வாய்ந்தது. இங்கு திருக்கோயில் கொண்டுள்ள சௌரிராஜப் பெருமாளைப் பற்றி திருமங்கை யாழ்வார் நூற்றி ஐந்து பாசுரங்கள் அருளிச் செய்துள்ளார்.

''நின் திருவெட்டெழுத்து'' என்று திருமங்கையுாழ்வார் அருளிச் செய்து உள்ளவாறு இது திருவெட்டெழுத்து சித்தித்தலமாகவும்,

ஆறு, திருக்குளம், நதி, வனம் முதலான ஏழுவகை புண்ணியங்களும் நிறையப் பெற்றதும், ஏழு புண்ணியங்களின் வடிவமாகவே உள்ளதுமான இதில் ''நீலாத்ரிமிதிஷ்டந்தம்'' ''கருவரை போல் நின்றானை'' என்கிற திருமங்கையாழ்வாரின் திருவாக்குப்படி ஓங்கி உயர்ந்து எழுந்தருளி இருக்கிறார் அருள் மிகு சௌரிராஜப்பெருமாள்.

திருக்கோயில் புராதனமானது (அறுபத்து நான்கு சதுர்யுகம் கண்டவர் சௌரிப் பெருமாள்) கிழக்கு மேற்கில் 316 அடிகளும், தெற்கு வடக்கில் 210 அடிகளும் உள்ளன. பெரிய ராஜகோபுரம் 95 அடி உயரம் உள்ளது. ஏழுநிலை மாடங்கள் அமைந்தது. கோபுரத்தில் ஏறி நாற்புறமும் பார்த்தால் 10கல் சுற்றளவில் உள்ள அனைத்தும் கண்ணுக்குப் புலப்படும். திருமலைராயன் பட்டினத்தருகில் உள்ள கடலருகில் திருக்கண்ணபுரம் எம்பெருமானுடைய 7வது பிரகாரம் இருந்திருக்கிறது. இத்திருக்கோயில் சப்த பிரகாரங்களைக் கொண்டதாக கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது.

''கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணபுரத்தமுதன்'' ஸ்ரீசௌரிராஜன் காமனும் வெட்கமுறும்படி வடிவழகுடையவர். ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி, ஆண்டாள் என்ற நான்கு தேவிகளுடன் நின்ற திருக்கோலத்துடன் பக்தர்களுக்கு காட்சி கொடுக்கிறார். ஸ்வர்ண கவசம் சாத்திக் கொண்டும் திவ்யாபாரணங்களை அணிந்து கொண்டும் இருக்கிறார். அகன்ற திருமார்பு உடையவர், திருப்பவளவாய் அழகர், பிரயோகச் சக்கரக்கையர், திருச்சங்கம் பொலிவுறும் கையர், தாரைவாங்கும் தடக்கையர், எழிலுறு கரத்தினர், சிவிளிகை கச்சி இலங்கும் அரைச்சிவந்த ஆடையார், தண்டுவை மாலையர், அருள்வரதர்- பத்மாஸனத்தில் அழுந்திய திருவடிகளும் சர்வாங்க சுந்தரத்துடனும் எழுந்தருளியிருக்கிறார். உபயநாச்சிமார்களுடன் , கண்ணபுரமுடையான் எழுந்தருளி இருக்கிறார். கிருஷ்ணனும், சக்கரத்தாழ்வாரும் எழுந்தருளி இருக்கின்றனர்.

''கருவறைபோல் நின்றானை கண்ணபுரத்தானை'' என்கிறபடி நீலமேகப் பெருமாள் (மூலவர்) சிலாரூபமாக எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீதேவி, பூமிதேவி மற்றும் தண்டகமகரிஷி, கருடாழ்வாரின் அற்புதமான சிலா திருமேனிகளையும் ஸேவிக்கலாம் திருமண்ணாழி பிரதஷ்ண பிரகாரம் உள்ளது.



பெருமானது விமானம் கண்களுக்கு இலாக்காவதில்லை... இதில் உறைபவர்கள் தமது சரீரத்தைப் பேணாமல் பெருமானையே வாழ்த்திக் கொண்டிருப்பர். இதனால் மாமிசம் வற்றிய சரீரம் கொண்டவர்கள். இவர்களது மோன நிலைக்கு இடையூறு நேராமல், விமானம் கண்ணிற் படாவண்ணம் மதில்கள் அமைந்துள்ளன. உயர் தவங்காரணமாக உலந்தசரீரம் உடையவர்கள் முனிவர்கள் விமானத்தில் தபஸ் செய்கிற படியால் உத்பலாவதக விமானம் என பெயர்.

### நித்யபுஷ்கரணி

இத்திருக்கோயிலை அடுத்துக் கிழக்கே நித்ய புஷ்கரணி அமைந்துள்ளது. இதில் இரவு, பகல் என்ற வரையறை இல்லாமல் எப்போதும் நீராடலாம். புண்ய தீர்த்தங்கள் யாவும் இதில் ஓர் அம்சமாக அமைந்துள்ளது. உத்ராயண புண்ய காலம். அதற்கு முதல் நாள் அடுத்தநாள் இவற்றில் தீர்த்தங்கள் முழுதும் இதில் கலந்துள்ளன. இம்மூன்று நாட்களிலும் இதில் நீராடுவது சிறந்தது. மகப்பேறு முதலியன பலனாகப் பெறக்கூடும். எம்பெருமான் சக்கர பிரயோகமாக திகழ்வதால் திருக்கோயிலை சுற்றி கிழக்கே நித்யபுஷ்கரணி, தெற்கே பூதவடதீர்த்தம், மேற்கே அனந்த சரஸ்தீர்த்தம், வடக்கே சிலம்பொன்னாழி என நான்கு நீர் நிலைகளை கொண்டதாக அமைகிறது.

### சவுரி முடி

உத்ஸவமூர்த்தி எப்போதும் தலையில் சவரி அணிந்திருக்கிறார். கருட வாகனத்தில் எழுந்தருளும் போதும் பின்னும் இரண்டு மூன்று நாட்களிலும் சவரி முடி அணிந்து கொள்கிறார். இதுபற்றிய நிகழ்ச்சி ஒரு நாள் பெருமானை சேவிக்க வந்த சோழமன்னனுக்கு ப்ரஸாதமாகக் கொடுக்க பூமாலை இல்லாமல் தவித்த அர்ச்சகர், தாம் சற்று முன்பு தேவதாசி ஒருத்திக்கு அனுப்பியிருந்த புஷ்பத்தைக் கொண்டு வரச் செய்து அதனை மன்னனுக்கு அளித்தார். அதில் கருப்பான கேசம் இருக்கக் கண்ட மன்னன் அர்ச்சகரை கடிந்தான். அர்ச்சகரும் பெருமானுக்கு எப்போதும் குழற்கற்றை உண்டு. அதில் அணிவித்த மாலை என்றார். இவரைச் சோழ மன்னனது கடுந்தண்டனையிலிருந்து விடுவிக்கப் பெருமான் கறுத்த மயிர்க் கற்றையுடன் காட்சியளித்தார்.

### ஸ்ரீ தாயார் சன்னதி

எம்பெருமான் சன்னதிக்கு தென்புறத்தில் ஸ்ரீ தாயார் சன்னதி

அமைந்துள்ளது. தனிக்கோயில் தாயாராக அமைந்துள்ளது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் திருமஞ்சனம், மற்றும் பிரகார புறப்பாடு நடந்து வருகிறது.

**ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னதி**

திருக்கோயிலுக்கு எதிரிலுள்ள நித்ய புஷ்கரணியின் பிரதான புஷ்கரணி படிக்கட்டின் மேல்புறம் தீர்த்தக்கரை ஆஞ்சநேயர் சன்னதி விசேடமாய் அமைந்துள்ளது. ஆஞ்சநேயருக்கு தனிக்கோயில் தீர்த்தக்கரையில் அமைந்து இருப்பதினால் இவரின் சக்தி அளவிட முடியாது. தெற்கு நோக்கி அஞ்சலி ஹஸ்தராய் நின்ற திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கும் இவர் வரப்பிரசாதி என்று மெய்யன்பர்கள் எல்லோரும் வணங்கி தங்களது சிரமம் நீங்க வரங்களைப் பெற்று மன அமைதியுடன் செல்வதை இன்றும் காணலாம். இவர் அருகில் சஞ்சீவிமலையை கையில் உயர்த்திப் பிடித்து ஸ்ரீராம லஷ்மணரின் துயர் துடைக்க விரைந்து செல்லும் ஆஞ்சநேயரும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

**இந்திரன் பிரதிஷ்டை செய்து பூஜித்த நவக்கிரக சன்னதி**

இராஜகோபுரத்தின் இடது பக்கத்தில் கோபுரம் ஏறும் இடத்திற்கு கிழக்கில் கோபுரச் சுவற்றில் மேற்கு திசைநோக்கிச் சக்கரம் அவரவர்கள் ராசியுடன் கல்வெட்டில் பொறித்து பிரதிஷ்டை செய்து இந்திரனால் பூஜிக்கப்பட்ட நவக்கிரக சன்னதி உள்ளது.

**ஆழ்வார்களது மங்களாசாஸநம்**


இப்பெருமானை மங்களாசாஸநம் செய்துள்ள ஆழ்வார்கள் ஐவர். பெரியாழ்வார் ''கண்புரத்தமுதே'' என்றும் அவரது திருமகளாகிய ஆண்டாள் ''கண்ணபுரநகர் வாட்டமின்றி மகிழ்ந்துரை வாமனன்'' என்றும் இசைத்துள்ளனர். குலசேகரப் பெருமாள் ''மன்னுபுகழ்'' என்ற திருத்தாலாட்டுப் பதிகத்தை இப்பெருமான் விஷயமாக அருளியிருக்கிறார். ''கண்ணபுரத்தென்காகுத்தன் தன்னடி மேலதாலேலோ என்றுரைத்த தமிழ் மாலை'' நம்மாழ்வார் இது முக்திதரும் தலம் என்பதை ''மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான்'' என்று அருளியுள்ளார்.

திருமங்கையாழ்வார் ஸ்ரீ சௌரிப் பெருமாளது திருமேனி ஸௌந்தர்யத்தில் ஆழ்ந்து தனியாக நூறு பாசுரங்கள் பெரிய திருமொழியில் எட்டாம் பத்தாக இசைத்துக்களித்தார். ''கண்ணபுரத்துப் பொன்மலை போல்'' நின்றவன் நான் வணங்கும் கண்ணனைக் கண்புரத்தானை ''பாட்டினால் உன்னை என் நெஞ்சத்திருந்தமை காட்டினாய்'' என்று பலவாறாகப் பாராட்டியுள்ளார்.

இப்பெருமானிடம் திருமந்திர அர்த்த உபதேசம் பெற்ற இவர், மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்துங்கற்று... நான் உற்றது முன் அடியார்க்கடிமை என்று அடியாரைப் போற்றுவது திருமந்திரத்தின் கருத்தாக வெளியிட்டார்.

**புராண வரலாறு**

இந்த ஸ்தலத்தின் மேன்மை ஸ்ரீ பத்ம புராணத்தில் பதினாறு அத்யாயங்களில் விவரம் பெற்றுள்ளது. ஸ்ரீ சௌரிப் பெருமான் க்ருதயுகத்தின் ஆரம்பத்தில் சித்திரை மாதம், பௌர்ணமி, திங்கட் கிழமை, ஹஸ்த நட்சத்திரம்



கூடிய நன்னாளில் மாலை ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து ஆர்பவித்தார்.

நைமிசாரண்யத்தில் தவம் செய்து வந்த ரிஷிகள், இந்த திருக்கண்ணபுரம் ஸ்பத புண்ய ஸ்தலம் என்றும், இதைப் போன்ற ஸ்தலம் இல்லை என்றும், தவத்திற்கும் அஷ்டாட்சரஸித்திக்கும் ஏற்ற ஷேத்ரம் இதுவே என்றும் பாராட்டியுள்ளனர். இந்த ஸ்தலத்திற்கான புண்ணியங்கள் அரண்யம், ஷேத்ரம், புரம், ஸமுத்ரம், ஆறு, புஷ்கரணி, விமானம் இவை க்ருஷ்ணாரண்யம், க்ருஷ்ணஷேத்ரம், கிருஷ்ணபுரம், கீழ் ஸமுத்ரம், காவிரி, நித்யபுஷ்கரிணி, உத்பலாவதகவிமானம்.

அமாவாசை

மாதந்தோறும் எம்பெருமான் தெற்கு நோக்கி விபீஷணன் ஆழ்வாருக்கு நடந்து சேவை சாதிக்கின்றார். இது வைணவ தலத்தில் எங்கும் நடைபெறாத ஒன்று மேற்படி தினத்தில் நித்திய புஷ்கரணியில் நீராடி எம்பெருமானை திருக்கைத்தலச் சேவை சேவிப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

விழாக்கள்

வைகாசி மாதம் - பிருமமோஸ்தவம் (ஏழாம் திருநாள் திருக்கல்யாணம்)

மாசி மாதம் -மாசி மகோஸ்தவம்

திருமலைராயன் பட்டினம் கடற்கரையில் தீர்த்தவாரி)

கருட பர்வதத்திற்குக் காட்சி அளித்தல்

முன்பு இந்திரனது மலைகளது சிறகுகளைத் துண்டித்த போது இந்த மலை கடலில் ஒளிந்து கொண்டது. கருடன் தனது தாயை அடிமை தளையினின்றும் விடுவித்ததால் செருக்குடன் ஆகாயத்திற்கு பறந்து சென்றான். வழியில் திருக்கண்ணபுரத்தின் மேல் செல்லும்போது அந்த நகரத்தின் பாலகர்களை (காவலர்களை) அவமதித்துக் கடந்து சென்றான். அவர்கள் இவனது நிழலைப் பற்றி இழுத்தனர். அவன் தனது சிறகுகளை இழந்து கடலில் இந்த மலையின் மேல் விழுந்தான். இங்கே பெருமானின் திருமந்திரத்தை கூறிக் கடுந்தவஞ் செய்தான். ஸ்ரீ சௌரிராஜன் அவள் முன்தோன்றி, பறக்கும் வலிமையை மீண்டும் அளித்துத் தமது வாகனமாக அவனை மீண்டும் ஏற்றுக் கொண்டார். இப்போதும் கருடன் கருவறையில் இப்பெருமான் முன்பு கரம் குவித்து வணங்கி நிற்கிறான். கருடன் அமர்ந்து தவஞ் செய்து வந்ததால், இம்மலை கருடபர்வதம் எனப் பெயர்பெற்றது.

கிழக்குக் கடலில் ஆழ்ந்துள்ள கருட பர்வதத்திற்குக் காட்சி அருள ஸ்ரீ சௌரி ராஜப் பெருமாள் கருடாருபராய்த் திருமலைராஜன் பட்டணத்தின் கடற்கரையில் மாசிமாதம் பௌர்ணமியன்று எழுந்தருளுகிறார். இவ்வாறு எழுந்தருள்வது புராணத்தில் கூறப்பட்டுள்ளது. கடற்கரையில் எண்ணிறைந்த மீனவர்கள் எம்பெருமானை எதிர்கொண்டு வரவேற்கின்றனர். பெருமான் எழுந்தருளும் வழியில் வலைகளை நடைபாவாடையாகப் பரப்பிப் பந்தலும் வனைந்து குதூகலத்தில் மாப்பிள்ளை ! மாப்பிள்ளை! என்று கோஷமிடுகின்றனர். பெருமான் உபரி சரவஸுவின் திருமகள் பத்மினியை திருமணம் செய்து கொண்ட வரலாற்றை மனத்திற் கொண்டு இராமபிரானை மிதிலை நகரத்து மக்கள் கொண்டாடி மாப்பிள்ளை என்று பேரானந்தத்தில் வரவேற்றது போல், இன்றும் மீனவர்கள் மகிழ்ச்சியில் ஆழக் காண்கிறோம். பெண்ணை பெருமான் மணந்து கொண்டார். இப்பெண்ணுக்கு வலைநாச்சியார் எனப் பெயர் என்று கூறுகின்றனர் சிவர். திருமங்கை யாழ்வார் பாசுரத்தில் ''வடித்தடங்காண் மலரவளோ வரையாகத்துள்ளியிருப்பாள் என்கின்றாளால்'' என்ற இடத்தில் வரையாகம் என்பதை வலையாகம் என்று கொண்டுள்ளனர் போலும்.

சௌரிப் பெருமானது திருவருளால் தேவேந்திரன் வருத்ராஜுரனைக் கொன்று தேவர்களை மகிழ்வித்தான். இங்குள்ள நித்ய புஷ்கரணிக் கரையில் வேள்வி செய்து, ப்ரஹமத்யை என்ற தோஷத்திலிருந்து தன்னை மீட்டுக் கொண்டு தான் இழந்த இந்திரப் பதவியையும் பெற்றான். இறைவனுக்குத் தன் நன்றியைக் காட்ட உத்பலாவதகே என்ற ஸ்லோகத்தை விண்ணப்பஞ் செய்து ஒரு விமானத்தையும் ஸமர்பித்தான். (சந்திரனது க்ஷயரோகம் ஸ்ரீ சௌரிப் பெருமாளின் அருளாலே நீங்கியது) இந்திரனுடைய நண்பனான உபரிசரவஸு என்ற வேந்தன், திருக்கண்ணபுரத்தை அமைத்துத் திருக்கோயிலையும் தீர்மானித்தான். தனது திருமகளாகிய பத்மினியை ஸ்ரீசௌரிப் பெருமாளுக்கு வைகாசி அனுஷதத்தன்று திருமணம் செய்து கொடுத்தான். இந்த வைபவம் இப்போது வைகாசி உத்ஸவத்தில் எட்டாவது நாள் நிகழ்கின்றது.

இத்தகைய பெருமைகளைக் கொண்ட வேண்டுவன அளிக்கும் திருக்கண்ணபுரம் ஷேத்திரத்திற்கு சென்னையிலிருந்து புகைவண்டி மூலம் வந்தால் நன்னிலம் நிறுத்தத்தில் இறங்கி கிழக்கே 5 கி.மீட்டர் பேருந்தில் வரலாம். பேருந்தில் வந்தால் கும்பகோணத்திலிருந்து நன்னிலம் வழி நாகப்பட்டினம் பேருந்தில் திருப்புகலூர் நிறுத்தத்தில் இறங்கி தெற்கே 1 கி.மீட்டர் வர வேண்டும். ஆட்டோ வசதி உள்ளது. திருக்கண்ணபுரத்தில் தங்குவதற்கு வசதிகள் உள்ளன. திருக்கண்ணபுரம் சென்றிடுவோம் கண்ணன் அருள் பெற்றிடுவோம்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13

ஆசிரியர் : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்.,

அச்சிடுவோர்: குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் திருக்கோயில்

திருக்கண்ணபுரம், நாகை வட்டம் & மாவட்டம்

## வைகாசி பிரும்மோத்சவப் பத்திரிகை

"திருக்கண்ணபுரத்தில் நீலாத்ரிமிவதிஷ்டந்தும்", "கருவரைபோல் நின்றானை" என்கிற திருமங்கையாழ்வாரின் திருவாக்குப்படி ஓங்கி உயர்ந்து எழுந்தருளியுள்ள ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளுக்கு நாளைய விய வருடம் வைகாசித் திங்கள் 19-ம் தேதி 02-06-2006 முதல் ஆனி மாதம் 2-ம் தேதி (16-06-2006) ஈறாக நடக்கப் போகிற வைகாசி பெருவிழாவை மனமுடையோர் அனைத்து புலன்களும் களிகூறும்படி வழிபட்டு ஸ்ரீ பெருமாளின் திருவருட்பேற்றினை அடைய வேண்டுகிறோம்.

### சிறப்புத் திருநாட்கள்

| | | |
|---|---|---|
| 06-06-2006 | செவ்வாய்க்கிழமை | இரவு தங்க கருடசேவை |
| 08-06-2006 | வியாழக்கிழமை | இரவு யானை வாஹனம் |
| 09-06-2006 | வெள்ளிக்கிழமை | இரவு பெரிய திருவாட்சி |
| 10-06-2006 | சனிக்கிழமை | இரவு திருக்கல்யாணம் |
| 14-06-2006 | புதன்கிழமை | இரவு வெள்ளி ரதம் |

**குறிப்பு :** 03-06-2006 முதல் 12-06-2006 முடிய தினம் வேதபாராயண திவ்யபிரபந்த ஸேவையும், ஸ்ரீ உடையவர் சன்னதியில் வைஷ்ணவ ததியாராதனையும் நடைபெறும்.

### திருக்கோயில் சேவை கட்டண விபரங்கள்

| எண் | சீட்டு விபரம் | கட்டண ரூ. பை |
|---|---|---|
| 1. | அஷ்டோத்திரம் | 2.00 |
| 2. | சுகஸ்நாமம் | 5.00 |
| 3. | திருமஞ்சனம் மூலவர் உத்சவர் | 100.00 |
| 4. | சௌரி முடி சாத்துதல் & சந்தானகிருஷ்ணன் | 10.00 |
| 5. | முடிசீட்டு & காதுகுத்தல் | 5.00 |
| 6. | திருமணக் காணிக்கை | 100.00 |
| 7. | தளிகை விட்டர் 1க்கு | 10.00 |
| 8. | ஸ்ரீ பெருமாள் புகைப்படம் | 30.00 |
| 9. | ஸ்ரீ பெருமாள் புகைப்படம் | 10.00 |
| 10. | ஸ்ரீ பெருமாள் லேமினேஷன் | 5.00 |
| 11. | ஸ்தல வரலாறு | 10.00 |
| 12. | நாள் 1க்கு 50 சேவார்த்திகளுக்கு அன்னதானம் வழங்க நிரந்தர முதலீடு கட்டளை | 15,000.00 |

### நித்தியல் பூஜை கட்டளை வேண்டுகோள்!

கவலைகளைத் தீர்த்தருளி காரியசித்திகள் நல்கிடும் கண்ணபுரக்கண்ணன் மேல் காதல் கொண்ட அன்பு உள்ளங்களால். கண்ணனின் நித்திய காலங்களில் இன்றும். என்றும் குறைபாடு எதுவும் ஏற்படக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்துடன், நித்தியல் பூஜை கட்டளை துவக்கப் பெற்று நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக நடைபெற்று வருகிறது. இதில் பங்குகொள்ள விரும்பும் கொடை உள்ளங்கள் நிரந்தர வைப்புத் தொகை ரூ. 1000/- செலுத்தி தாங்கள் விரும்பும் தினத்தில் நித்தியல் பூஜையில் பங்கு பெற்று இறையருள் பெற வேண்டுகிறோம்.

### நன்கொடைகள் அல்லது காசோலைகள் அனுப்ப வேண்டிய முகவரி


செயல் அலுவலர்

அருள்மிகு சௌரிராஜப் பெருமாள் திருக்கோயில்

திருக்கண்ணபுரம் - 609 704, நாகை வட்டம்

தொலைபேசி எண்: 04366-270557


**இவண்**

**செயல் அலுவலர் / அறங்காவலர்கள்**

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

வடபழனி, சென்னை -26, தொலைபேசி : 2483 6903
இ-மெயில் முகவரி : vadapalanidavar@vsnl.net
இணையதள முகவரி : www.vdapalanidavar.org

## வைகாசி விசாகப் பிரம்மோற்சவம் அழைப்பிதழ்

திருமுருகன் திருத்தலங்களுள் தொன்மை வாய்ந்த தென் பழநியில் பழநியாண்டியாகவும் சென்னை கோடம்பாக்கம் என்ற வடபழநியில் வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளித்துக் கொண்டு கலியுக வரதனாய் எழுந்தருளியிருப்பவர் வடபழனி ஆண்டவர். குறைவற்ற செல்வமும், கல்வியும், வாழ்வும் கொடுக்கும் அன்பு நிறையப் பெற்ற அருள்மிகு வடபழநிஆண்டவருக்கு நிகழும் விய வருடம் வைகாசி மாதம் 16ம் நாள் 30.05.2006 முதல் வைகாசி மாதம் 27ம் நாள் 10.06.2006 முடிய **வைகாசி விசாகப் பிரம்மோற்சவம்** நடைபெற உள்ளது. 11.06.2006 முதல் 20.06.2006 முடிய விடையாற்றி உற்சவம் நடைபெற உள்ளது. விழா காலங்களில் சிறப்பு நாதஸ்வர இசையும் தேவார திருப்புகழ் இன்னிசையும், வேதபாராயணமும் நடைபெற உள்ளது. அன்பர்கள் வந்திருந்து வடபழநிஆண்டவரின் பேரருளைப் பெற வேண்டுகிறோம்.

இத்திருக்கோயிலின் சார்பில் வடபழநியில் அழகிரி நகர் நெடுஞ்சாலையில் தெய்வானை வள்ளி திருமண மண்டபங்கள் திருக்கோயிலுக்கு பின்புறம் வெகு அருகில் நவீன வசதிகளுடன் கட்டப் பட்டுள்ளது.

### வாடகை விபரம்

**தெய்வானை மண்டபம்**

1-வது நாள் ரூ. 6000/-
2-வது நாள் ரூ. 5000/-
திருமணம் அல்லாத சிறிய விழாக்களுக்கு
நாள் வாடகை ரூ.3000/-

**வள்ளி மண்டபம்**

1வது நாள் ரூ. 10,000/-
2-வது நாள் ரூ. 9000/-
திருமணம் அல்லாத சிறிய விழாக்களுக்கு
நாள் வாடகை ரூ. 5000/-

டெபாசிட் தொகை ரூ. 3000/-

- தங்கும் விடுதி அறை 1 நாளைக்கு ரூ. 250/- திருமண மண்டபம் பதிவு செய்பவர்களுக்கு மட்டும்
- திருமண மண்டபத்தில் பாத்திரங்கள் மற்றும் பர்னிச்சர் வதிகள் உள்ளது.
- திருமண மண்டபத்தில் அருள்மிகு வடபழநிஆண்டவர் திருக்கோயில் அருகில் உள்ள காரணத்தினால் பெண், மாப்பிள்ளை அழைக்கும் வசதி உள்ளது.

### கட்டண விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| திருக்கல்யாணம் செய்ய | 2000.00 | வீடியோ படம் எடுக்க | 250.00 |
| தங்கரதம் இழுக்க | 1000.00 | அர்ச்சனை டிக்கட் 1க்கு | 2.00 |
| 108 சங்காபிஷேகம் | 1000.00 | சிறப்பு அனுமதி (விழாக்காலங்கள்) | 10.00 |
| சந்தனக்காப்பு | 650.00 | சிறப்பு அனுமதி நுழைவு நபர் 1க்கு | 5.00 |
| விபூதி பஞ்சாமிர்த அபிஷேகம் | 300.00 | முடி காணிக்கை நபர் 1க்கு | 10.00 |
| பால் அபிஷேகம் | 120.00 | காது குத்த நபர் 1க்கு | 15.00 |
| சகஸ்ரநாமம் | 30.00 | ஹோமத் திருமணக்கல்யாணம் | 500.00 |
| வடை மாலை | 120.00 | சஷ்டியப்த பூர்த்தி | 300.00 |
| அன்ன பிராசனம் | 50.00 | பெண்/மாப்பிள்ளை அழைப்பு | 50.00 |
| பால் காவடி 1க்கு | 20.00 | ஆயுள் ஹோமம்/கணபதி ஹோமம் | 101.00 |
| பிலிம் பெட்டி 1க்கு | 1000.00 | நிச்சயதார்த்தம் | 300.00 |

அன்னதானம் நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு உணவளித்திட ரூ. 1200/-

அன்னதானக் கட்டளை நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு உணவளித்திட ரூ. 15000/-

திருக்கோயில் பின்புறம் உள்ள, திருக்கோயிலை சார்ந்த **சித்தர்கள் ஆலயத்தில்** மாதந்தோறும் பௌர்ணமி பூஜை மற்றும் அன்னதானம் நடைபெறுகின்றது. சித்தாகள் ஆலய அபிஷேகத்திற்கு திருக்கோயிலில் ரூ.300/- பணம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவும்.

### இலவச சித்த மருத்துவமனை

திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் நோக்கத்தோடு, திருக்கோயில் சார்பில் இலவசசித்த மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. பக்தர்களும், பொது மக்களும் பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம். காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை - மாலை 4.00 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்படும்.

**இவண்**
**துணை ஆணையர் / செயல் அலுவலர்**
**அறங்காவலர்கள்**